




## நாவலுக்குள் நுழையும் முன் இதைப் படியுங்கள்

எட்டு வருட ஜெயில் தண்டனையை அனுபவித்துவிட்டு நியுயார்க் சிறையிலிருந்து விடுதலையாகிறான் வில்பர்ட். சுதந்திரக் காற்று சுகமாக இருந்தாலும் இனி மேற்கொண்டு என்ன செய்வது... எங்கே செல்வது...? என்ற கேள்விக்குறிகள் அவன் கண் முன்னே பெரிய கவலைக் குறிகளாய் வந்து நிற்கின்றன.

மனைவி ஜெனிஃபரின் ஞாபகம் அவனைத் தாக்கியது. அவளுடன் சந்தோஷமாய்க் கழித்த தேனிலவு நாட்கள் அவன் நெஞ்சில் மோதுகின்றன. கூடவே அந்த மோசமான நாளும் நினைவுக்கு வருகிறது. அவன் கண் முன்னே நிகழ்ந்த மூன்று கொலைகளையும் அதன் விளைவாய் ஜெயில் சுவர்க்குள் அடைபட்டதையும் நினைத்துப் பார்க்கிறான்.

போலீஸ் அவனைப் பிடித்துச் செல்கிற போது மனைவி ஜெனிஃபர் அவனைப் பார்த்துக் காறி உமிழ்ந்து விட்டுப் போன காட்சி பளிச்சென்று மனசுக்குள் அப்படியே நின்றிருந்தது. இனி வீட்டுக்குப் போனால் அவள் வரவேற்கமாட்டாள் என்பது நிச்சயமாய்த் தெரிந்தது. இருந்தாலும் ஒரு நப்பாசையில் அவளுக்கு டெலிஃபோன் செய்கிறான். தான் ஜெயிலிலிருந்து விடுதலையாகி விட்ட விபரத்தை அவளுக்குத் தெரிவிக்கிறான். மறுமுனையில் ஜெனிஃபரிடமிருந்து வந்த பதில் அவனை ஆச்சரியப்படுத்துகிறது. அவன் இன்று விடுதலையாவது தெரியும் என்றும், அவன்

வரவைத்தான் ஆவலோடு எதிர்பார்த்திருப்ப தாகவும் சொல்லுகிறாள்.

வில்பர்ட் மகிழ்ச்சியுடன் டாக்சி பிடித்து ஃப்ளாட்டுக்குப் போகிறான். அங்கே தன்னுடைய வீட்டில் தன்னுடைய ஸ்தானத்தில் ஜெனிஃபருடன் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் வேலை பார்க்கிற மைக்கேல் என்பவன் இருப்பதைப் பார்க் கிறான். அந்த மைக்கேல், வில்பர்ட் வந்திருக்கும் செய்தியைச் சொல்லி ஜெனிஃபரைக் கூப்பிடுகிறான்.

வேலைக்குக் கிளம்புகிற அவசரத் தோரணையோடு ஜெனிஃபர் வருகிறாள். வராந்தா மூலையில் வில்பர்ட்டுக்குச் சொந்தமான பொருட்களை மொத்தமாய்க் கட்டி வைத்திருப்பதாகவும், அதை எடுத்துக் கொண்டு போகத்தான் அவனை வரச் சொன்னதாகவும் சொல்கிறாள்.

வில்பர்ட்டுக்குள் கோபம் பீறிடுகிறது. ஜெனிஃபரையும் மைக்கேலையும் திட்டி வாக்குவாதம் செய்கிறான். மைக்கேல் அவனை வெளியேறுமாறு எச்சரிக்கிறான். தொடர்ந்து வில்பர்ட் வாக்கு வாதம் செய்தபடி இருக்கவே மைக்கேல் அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிறான். வில்பர்ட்டின் பொருட்கள் அடங்கிய பையைத் தூக்கி எறிகிறான். கதவைச் சாத்துகிறான். வில்பர்ட் ஆத்திரத்தோடு கதவைத் தட்டுகிறான். அதற்குள் ஜெனிஃபர் ஃப்ளாட் செக்யூரிட்டி கார்டுகளுக்கு இண்ட்டர்காம் செய்ய அவர்கள் வந்து வில்பர்ட்டை அந்த அப்பார்ட்மெண்ட் காம்பவுண்டை விட்டே விரட்டியடிக்கிறார்கள்.

**பா**ர்க்கில் உட்கார்ந்து மைக்கேல் தூக்கியெறிந்த பையிலிருந்த பொருட்களை



ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்க்கிறான் வில்பர்ட். அந்தப் பையில் அவனுடைய கம்ப்யூட்டர் என்ஜினியரிங் பட்டம் சர்டிஃபிகேட்களும் இருக்கின்றன. வேலை தேடுவதென்று தீர்மானிக்கிறான். ஜெயிலுக்குப் போனவன் என்று தெரிந்தால் யார் வேலை' கொடுப்பார்கள்... என்ற சிந்தனை அவனைக் கவலையில் ஆழ்த்துகிறது. பையில் பாங்க் பாஸ் புத்தகம் இருந்தது. அதில் சொற்ப சேமிப்பும் இருந்தது. அந்தப் பணத்தை ட்ரா செய்து முதலில் ஒரு வாடகை அறை பிடிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிறான். பார்க்கை விட்டு வெளியே வந்தபோது அவனை ஒரு பெண் தோளைத் தொட்டுத் திருப்புகிறாள்.

''நீங்கள் வில்பர்ட்தானே...?'' என்று கேட்கிறாள். தலையசைத்த வில்பர்ட்டுக்கு அவளை யார் என்று தெரியவில்லை. அவள் தன் பெயர் **டாஃப்னி** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு - வில்பர்ட் படித்த அதே காலேஜில் படித்ததாகவும் கோல்டு மெடலிஸ்ட்டான வில்பர்ட்டை காலேஜில் படிக்கிற நாட்களிலேயே நன்கு தெரியும் என்றும் சொல்கிறாள். இப்போது அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று விசாரிக்கிறாள். வில்பர்ட் தான் வேலை தேடுவதாகச் சொன்னபோது ஆச்சரிய மடைகிறாள். வில்பர்ட் தான் ஜெயிலுக்குப் போன விபரங்களை மறைத்து விட்டு நிர்வாகத்துடன் ஏற்பட்ட தகராறு காரணமாய் - தான் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டதாக பொய் சொல்லுகிறான். அவள் தான் இப்போது நல்ல வேலையில் இருப்பதாகவும் அவனைப் போன்ற திறமை சாலிகளுக்கு அந்தக் கம்பெனியில் நல்ல வரவேற்பும் மரியாதையும் இருக்குமென்றும்

கூறி அவனை அவளுடைய கம்பெனிக்கு அழைத்துச் செல்கிறாள்.

அது ஒரு பெரிய அட்வெர்ட்டைசிங் கம்பெனி. ஒரு அடுக்கு மாடிக் கட்டிடத்தின் அத்தனை தளங்களையும் தன் அலுவலகப் பணிகளுக்காக விழுங்கியிருந்தது. அத்தனை நாடுகளிலும் அதன் கிளை பரவியிருப்பதாக டாஃப்னி சொல்லுகிறாள். கம்பெனியின் பாஸ் நிக்ஸனிடம் வில்பர்ட்டை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைக்கிறாள். பாஸ் நிக்ஸன் பொதுவாய் அவனைப் பற்றிக் கேட்டு விட்டு அவனுக்கு அப்பாய்ன்மெண்ட் தருகிறார். வில்பர்ட் வேலையை ஆரம்பிக்கும் சமயத்தில் அங்கிருந்த சீஃப் இஞ்சினியர் அவனை நிக்ஸனிடம் கூட்டிப் போய் அவன் இந்தக் கம்பெனியில் வேலை பார்க்கத் தகுதி இல்லாதவன் என்று சொல்லி ஒரு பழைய செய்தித்தாளை நிக்ஸனிடம் காட்டுகிறார். அதில் வில்பர்ட் பாங்க் கொள்ளையில் ஈடுபட்டுக் கைதான விபரங்கள் விலாவாரியாய் பிரசுரிக்கப் பட்டிருந்தது. இதெல்லாம் உண்மையா என்று கேட்கிறார் நிக்ஸன். அவராகக் கம்பெனியை விட்டுப் போகச் சொல்லும் முன்பாக தானே வெளியேறுவது நல்லதென்று பதிலொன்றும் சொல்லாமல் அங்கிருந்து சென்று விடுகிறான்.

**சா**யந்திரம் டாஃப்னி அவனை வந்து சந்திக்கிறாள். பதில் எதுவும் சொல்லாமல் அவன் வந்துவிட்டது தவறு என்கிறாள். அவன் ஜெயிலுக்குப் போனது குறித்து விசாரிக்கிறாள். சில தவறான நபர்களின் தொடர்பு அவனை பாங்க் கொள்ளையில் ஈடுபடுத்திவிட்டன... என்றும், பாங்க்கின் கம்ப்யூட்டரைஸ்ட் ஸேஃப் லாக் சிஸ்டத்தை வடிவமைத்துக் கொடுத்தது தன்னுடைய



கம்பெனிதான் என்றும், அதை முடக்கி வைப்பதற்காக பண ஆசை காட்டி அவர்கள் அவனைக் கூட்டிச் சென்று விட்டதாகவும் சொல்கிறான். கொள்ளையடிக்கிறபோது ஒரு சிறிய தவறு நேர்ந்து அவர்கள் பிடிபட வேண்டியதாயிற்று... அந்தச் சமயத்தில் பாங்க் காவலாளிகள் சிலரை அவர்கள் சுட்டுக் கொல்ல - அந்தக் கொலையில் அவனுக்கும் பங்கு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு எட்டு வருட சிறை வாசத்தை அனுபவிக்க வேண்டியதாயிற்று. இப்போது வாழ்க்கையே திசை மாறிவிட்டது... மனைவி ஜெனிஃபரும் விரட்டியடித்து விட்டாள்... என்று விபரமாக அவளிடம் சொல்கிறான்.

''பாஸ் நிக்ஸனின் வீட்டுக்குக் கூட்டிப் போகிறேன்... தவறை உணர்ந்து கொண்டவர்களுக்கு அவரிடம் எப்போதுமே மன்னிப்பு உண்டு.'' என்று சொல்லி டாஃப்னி அவனை நிக்ஸனின் வீட்டுக்குக் கூட்டிப் போகிறாள்.

அங்கே -

பாஸ் மற்றும் டாஃப்னியின் வேறொரு பரிமாணம் வில்பர்ட்டுக்குத் தெரிய வருகிறது. இன்னொரு மூன்று கொலைகள் செய்ய வேண்டும்... அதற்கு அவனுடைய உதவி வேண்டும் என்று சொல்கிறார் நிக்ஸன். வில்பர்ட்டுக்கு அதிர்ச்சியாய் உள்ளது. நிக்ஸன் விவரிக்கிறார். தனக்கு வில்பர்ட்டைப் பற்றி ஏற்கெனவே அத்தனை தகவல்களும் தெரியுமென்றும், அவன் விடுதலையாகும் தேதியைத் தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்ததாகவும் சொல்கிறார். டாஃப்னி அவனை வந்து சந்தித்தது. வேலை வாங்கித் தருவதாகச் சொன்னது எல்லாமே முன் கூட்டியே திட்டமிட்ட நாடகங்கள் என்று சொல்லுகிறார் நிக்ஸன்.

‘விடுதலையான உன்னை போலீஸ் கண்காணிக்கக் கூடும். அவர்கள் கண்ணை மறைப்பதற்காக அட்வெர்ட்டைசிங் கம்பெனி வேலையில் உன்னை அமர்த்த நினைத்தோம்’ என்கிறார். ‘அதற்குள் கம்பெனி இஞ்சினியர் பழைய செய்தித் தாளைக் கொண்டு வந்து காட்டி காரியத்தைக் கெடுத்து விட்டார். பரவாயில்லை. திட்ட மிட்டபடி காரியங்களை இனி ஆற்றலாம்’ என்கிறார் நிக்ஸன். மேற்கொண்டு அவன் செய்ய இருக்கிற காரியங்களுக்காக கோடிகோடியாய் டாலர் அளிக்கப் போவதாக சொல்கிறார் நிக்ஸன். அந்த வலையில் சுலபமாக விழுந்து விடுகிறான் வில்பர்ட். ‘யாரைக் கொலை செய்யவேண்டும்? அதில் என்னுடைய பங்கு என்ன?’ என்று கேட்கிறான். ‘அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் தன்னுடைய செவ்வாய்க் கிரகப் பயணத்தின் முதல்கட்டமாக சந்திரனுக்கு ஒரு ராக்கெட்டை அனுப்பப் போகிறது. அதில் பயணிக்க இருக்கிற மூன்று விண்வெளி வீரர்களைக் ஒகொலை செய்ய வேண்டும். உன்னுடைய கம்ப்யூட்டர் அறிவைப் பயன்படுத்தி அந்த விண்கலத் தின் முக்கிய செயல்பாடுகளையும் முடக்கி விட வேண்டும்’ என்று சொல்கிறார் நிக்ஸன்.

அப்போதுதான் வில்பர்ட்டுக்கு அட்வெர்ட்டைசிங் கம்பெனி என்ற போர்வையில் ஒரு பெரிய கூலிப்படையை நிக்ஸன் உலக அளவில் இயக்கி வருவது தெரிகிறது. அமெரிக்காவின் செவ்வாய்க் கிரகப் பயணத்தில் ராணுவ உள்நோக்கம் இருப்பதாகச் சந்தேகப்படும் ஜப்பான் இந்தத் திட்டத்தை முறியடிக்கும் பணியை நிக்ஸனிடம் ஒப்படைத்திருப்பது புரிகிறது.



இந்தப் பணியில் தானும் பங்கெடுத்துக் கொள்ளச் சம்மதிக்கிறான் வில்பர்ட்.

அன்றிரவு விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் குவார்ட்டர்ஸ் பகுதிக்குச் செல்கிறார்கள் டாஃப்னியும் வில்பர்ட்டும். டாஃப்னி விண்வெளி வீரர்களான டேவிட், ஜோ, ராபின்ஸ் ஆகியோருக்கு ஃபோன் செய்து ஜெனிஃபர் மாதிரி பேசுகிறாள். ஏர்போர்ட்டில் வைத்து விண்வெளி ஆராய்ச்சி நிபுணர் ஒருவரை சந்தித்துப் பேச வேண்டியுள்ளதால் உடனே மூன்று பேரும் குவார்ட்டர்ஸுக்கு வெளியே வருமாறும், அங்கே காரில் தான் காத்திருப்பதாகவும் சொல்கிறாள். தங்கள் அதிகாரி ஜெனிஃபர் தான் அழைப்பதாகக் கருதிக் கொண்டு டேவிட், ஜோ, ராபின்ஸ் மூன்று பேரும் குவார்ட்டர்சுக்கு வெளியே நின்றிருக்கிற அந்தக் காருக்கு வருகிறார்கள். காருக்குள் நுழைந்த அவர்களை துப்பாக்கி முனையில் கடத்திச் செல்கிறார்கள் வில்பர்ட்டும், டாஃப்னியும்.

நிக்ஸனின் பிரம்மாண்டமான பங்களா வின் ஒரு மூலையில் இருக்கும் ‘டெட் செல்’லில் அவர்களை அடைத்து வைக்கிறார்கள். நிக்ஸனுக்குத் தகவல் போகிறது. நடுநிசி பன்னிரெண்டு மணிக்கு மேல் நிக்ஸன் அங்கே வந்து சேர்கிறார். அந்த இடம் ஒரு மினி **ஸ்பேஸ்க்ராஃப்ட்** மாதிரி இருக்கிறது. வெட்டவெளி மைதானத்தின் நடுவில் வட்டமான தடுப்புக்குள் ஒரு குட்டி ஸ்பேஸ்க்ராஃப்ட் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதன் உள்ளே கம்ப்யூட்டர் டெர்மினல்களை மும்முரமாய் இணைத்துக் கொண்டிருக் கிறான் வில்பர்ட். அவனுக்கு உதவி செய்கிறாள் டாஃப்னி. நிக்ஸன் அருகில்

வந்து அதன் இயக்கங்கள் சரியாக உள்ளதா என்று பார்க்கிறார். டேவிட், ஜோ, ராபின்ஸ் மூன்று பேரையும் பற்றி விசாரிக்கிறார். மூவரும் டெட் செல்லுக்குப் போகிறார்கள். நிர்வாண உடம்புகளோடு ரத்தக் காயங்கள் சகிதம் - மின்சார நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கிறார்கள் அவர்கள் மூன்று பேரும். நிக்ஸனின் ஆட்களிடம் நிறைய அடிபட்டுத் தெரிகிறார்கள். 'நாஸா'வைப் பற்றித் தகவல் அளிக்கச் சொல்லி மிரட்டுகிறார் நிக்ஸன். அவர்கள் மூன்று பேரும் வாயைத் திறக்க மறுக்கிறார்கள். நிக்ஸன் கோபத்துடன் கோட் பையில் வைத்திருந்த பிளாட்டின உலோகக் கத்தியை வெளியே எடுக்கிறார். பட்டனை அழுத்த அதன் கூர்மையான நாக்கு வெளியே எட்டிப் பார்க்கிறது. ஜோவின் கழுத்தில் வைத்து அழுத்துகிறார். ஜோ அவரின் எந்த மிரட்டலுக்கும் ப்ணியாமல் வாய் திறக்க மறுக்கிறான். நிக்ஸனின் ஆத்திரம் உயர்ந்து கத்தியை அழுத்த அது ஜோவின் கழுத்தில் புதைந்து ரத்தம் பாய்ச்சி அடிக்க ஆரம்பிக்கிறது. இதற்கிடையில் 'நாஸா விண்வெளிக் கழகம்' ஜோ, ராபின்ஸ், டேவிட் ஆகிய மூன்று பேரையும் காணாமல் பரபரப்படைகிறது. அவர்களை மீட்பதற்காக போலீஸ் மும்முரமாய் இயங்குகிறது.

இதற்கிடையில் வில்பார்ட் தன்னுடைய மூளையைச் செலவழித்து உருவாக்கிய உளவு விண்கலத்தை நாஸாவை வேவு பார்க்க அனுப்பி வைக்கிறான். நாஸாவின் தகவல் தொர்டர்பு கட்டுப்பாட்டுக் கேந்திரத்துக்கு தட்டுப்படாத அந்த உளவு விண்கலம் அங்கிருந்து தகவல்களை அளித்த வண்ணம் இருக்கிறது. மூன்றாவது



நாள் விடியற்காலை நேரம் அந்த உளவு விண்கலம் அளித்த தகவல் வில்பர்ட், டாஃப்னி, நிக்ஸன் - மூன்று பேரையுமே பலமாய் அதிர வைத்தது. **அமெரிக்காவின் மார்ஸ் வாயேஜர் - 20 இன்று அதிகாலை மூன்று மணி பதினொரு நிமிடங்களுக்கு பசிபிக் கடல் முனையிலிருந்து சந்திர னுக்குப் புறப்பட்டு விட்டது** என்று உளவு மானிட்டர் தெள்ளத் தெளிவாக செய்தியை எழுதியது.

நிக்ஸனும் மற்றவர்களும் குழப்பத்துடன் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொள் கிறார்கள். கேள்வி ஆணைத் தொடர்புகளை உளவு கலத்துக்கு வரிசையாக அனுப்பி வைக்க - ஜெனிஃபர், மைக்கேல், ஒயிட்மேன் ஆகியோரைச் சுமந்து கொண்டு அந்த விண்கலம் சந்திரனை நோக்கிப் புறப்பட்டிருப்பது உறுதியாகிறது. பயிற்சி பெற்ற விண்வெளி வீரர்கள் மூன்று பேரும் தங்களால் கடத்தப்பட்ட பின் எப்படி அந்த விண்கலம் புறப்பட்டுச் சென்றது என்று குழப்பமடைகிறார்கள் அவர்கள்.

மீண்டும் டெட் செல்லை அடைந்து - எஞ்சியிருக்கும் ராபின்ஸ், டேவிட் ஆகியோரை விசாரணை செய்கிறார்கள். நிக்ஸன் அவர்களை மூர்க்கத்தனமாக மிரட்டுகிறார். 'விபரங்களைத் தெரிவிக்கா விட்டால் ஜோவின் நிலைமை உங்கள் இருவருக்கும் ஏற்படும்' என்று எச்சரிக்கிறார். உண்மைகளைக் கொட்ட மறுத்த டேவிட்டின் வயிற்றைப் பிளக்கிறார் நிக்ஸன். கத்தியோடு ராபின்ஸை நெருங்குகிறார்.

பயத்தில் ராபின்ஸ் நிஜங்களை உதிர்க்க ஆரம்பிக்கிறான். ராபின்ஸ், ஜோ, டேவிட் மூன்று பேருமே டம்மி... அவர்களுக்கு எந்த

விதமான பயிற்சியும் கொடுக்கப்பட வில்லை... ரகசிய போலீஸ் இந்த செவ்வாய்க் கிரகப் பயணத்திட்டத்தில் வெளிநாட்டு சதி இடம் பெறலாம் என்று எச்சரிக்கை விடுத்திருந்ததால் இவர்கள்தான் விண்வெளி வீரர்கள் என்று டம்மியாக அறிவித்து விட்டு உண்மையான பயணப் பயிற்சியை திரை மறைவில் ஜெனிஃபர், மைக்கேல், ஒயிட்மேன் ஆகியோர் எடுத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்ற உண்மை நிக்ஸனையும் மற்றவர்களையும் திடுக்கிட வைக்கிறது.

நிக்ஸனுக்குள் ஆத்திரம் எகிறியது. கத்திக் கொண்டே ராபின்ஸின் வயிற்றில் கத்தியை சொருகி இழுக்கிறார்.

ரத்தம் சொட்டும் கத்தியோடும் வெறி யோடும் கூக்குரலிடுகிறார். **'பூமியில் தோற்று விட்டோம். ஆனால் விண்வெளியில் ஜெயிக்கப் போகிறோம். ஜெயிக்க வேண்டும்.'** என்று உறுதியாகச் சொல்கிறார்.

அப்புறம்...

இனி... நாவலைத் தொடர்ந்து படிக்க ஆரம்பிக்கலாம்! பக்கங்கள் உங்களுக்காக சூடாகக் காத்திருக்கின்றன.

---

## 1

---

**டோ**க்கியோ விமான நிலையம்.

நிக்ஸனோடு - வில்பர்ட்டும், டாஃப்னியும் விமானத்திலிருந்து இறங்கியபோது விமான நிலையம் முழுவதும் ஒரு பாலிதீன் பைக்குள் மூடப்பட்ட மாதிரி பனி மூட்டத்துக்குள் சிக்கியிருந்தது. ஜெராக்ஸ் எடுத்த மாதிரி ஒரே



டைப்பில் இருந்த ஜப்பானியர்கள் எல்லா திசைகளிலும் நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஜப்பானிய மொழியிலும், போனால் போகிற தென்று ஆங்கில மொழியிலும் - பறக்கப் போகும் விமானங்களைப்பற்றி ஸ்பீக்கர்களில் ஒரு பெண் குரல் கொஞ்சிக் கொண்டிருந்தது.

மூவரும் **'இமிக்ரேஷன் கஸ்டம்'** சங்கதிகளை முடித்துக் கொண்டு - விமான நிலையத்தைவிட்டு வெளியே வந்து டாக்ஸி பிடித்தார்கள். நிக்ஸன் பெரும்பாலும் அமைதியாகவே வந்தார். முதல் முறையாக தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட காரியம் தோல்வியைத் தழுவி விட்ட கோபம் உள் மனதை இன்னமும் ரணமாய் கீறிக் கொண்டிருந்தது.

மூவர்க்குள்ளும் வேண்டாத மௌனம்.

நெட்டை கட்டிடங்களுக்கு நடுவே கார் உச்சபட்ட வேகத்தில் பீறிட்டது. கண்ணாடிக்கு வெளியே காட்சிகள் நொடிக்கு நொடி மாறின.

அரைமணி நேர பயணத்திற்கு பிறகு - டாக்ஸியின் வேகம் குறைந்தது. வில்பர்ட்டின் பார்வை வெளியே போயிற்று.

ஏதோ ஒரு கெமிக்கல் ஃபாக்டரியின் பெயரைத் தாங்கியிருந்த ஒரு உயரமான காம்பௌண்ட் தெரிந்தது.

டாக்ஸியை காம்பௌண்ட்டுக்கு வெளி யிலேயே நிறுத்தி மூன்று பேரும் இறங்கிக் கொண்டார்கள். டிரைவர் பணத்தைப் பெற்று - காரை துரிதமாய் விரட்டிக் கொண்டு போனதும் - நிக்ஸன் வில்பர்ட்டையும் டாஃப்னியையும் ஏறிட்டார்.

"கெமிக்கல் ஃபாக்டரி கட்டிடம் மாதிரி தெரிகிற இதுதான் நான் சொன்ன விண்வெளி ஆராய்ச்சி நிலையம். நியூயார்க்கில் ஒருவேளை நம்முடைய திட்டம் தோல்வி அடைந்துவிட்டால் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை இங்கேதான்

தீர்மானிக்கப் போகிறோம். நமக்கு உறுதுணையாய் இருப்பவர்கள் அதற்கான அத்தனை ஏற்பாட்டையும் செய்து விட்டார்கள்."

"என்ன ஏற்பாடு...?"

"உள்ளே வா... விபரமாய் தெரிந்து கொள்வாய்."

செண்ட்ரிகள் அந்த மூன்று பேரையும் எதுவும் கேட்காமல் சல்யூட் அடித்து உள்ளே அனுப்பினார்கள்.

கான்க்ரீட் ரோடு வழிகாட்ட கொஞ்சம் தொலைவிலேயே அந்தக் கட்டிடம் தெரிந்தது. கட்டிடத்துக்கு அப்பால் கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் வெட்டவெளி. ஒரு மரம் மட்டை, பயிர் பச்சை தெரியவில்லை.

நடக்கநடக்கவே எதிர்பட்டார் ஒரு குள்ளமான ஜப்பானியர். நல்ல ஆங்கிலம் பேசினார்.

"விமான நிலையத்திற்கு கார் அனுப்பியிருந்தோம்."

"எங்களை யாரும் தொடர்பு கொள்ளவில்லையே!"

"சோம்பேறி டிரைவர்...! டாக்ஸியில்தான் வந்தீர்களா...?"

"ஆமாம்..."

"நேரிட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம். உள்ளே வாருங்கள்." கூட்டிக்கொண்டு போனார்.

பெரும்பாலும் கண்ணாடிக் கதவோடும் சுவர்களோடும் அறைகள் வந்தது. உள்ளே மௌனமாய் ஆட்கள் இயங்கினார்கள்.

ஏறக்குறைய நூறு மீட்டர் தூரம் நடந்ததும் - தரைக்குக் கீழே படிகள் இறங்கியது.

இறங்கினார்கள்.

வெளிச்சமாய் அறை விரிந்தது. அறை முழுக்க கம்ப்யூட்டர்கள்; புத்திசாலித்தனமான சூப்பர் கம்ப்யூட்டர்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாகசத்தை காப்பம் தாங்கி



யிருந்தது. கம்ப்யூட்டர்களின் அறிவை மானிட்டர்களில் சோதித்துக் கொண்டிருந்த அந்த ஜப்பானிய இளைஞன் திரும்பினான்.

மலர்ந்து நிக்ஸனின் கையைப் பற்றிக் கொண்டு குலுக்கினான். "தோற்றுவிட்டதற்காகத் துவண்டு விடாதீர்கள். **'இறுதியில் சிரிப்பவனே ஜெயிப்பான்.'** என்கிற பழமொழி எங்களுடைய ஜப்பான் மொழியில் உண்டு. விண்வெளியில் அமெரிக்கர்களை நாம் வெற்றி கொள்ளப்போவது நிஜம்."

"எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது சஸாங்" சொன்ன நிக்ஸன் வில்பர்ட்டையும் டாஃப்னியையும் - அந்த சஸாங் என்கிற இளைஞனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

பரஸ்பரம் 'ஹலோ' சொல்லி கை குலுக்கிக் கொண்டார்கள்.

சஸாங் நிக்ஸனிடம் கேட்டான்.

"இவர்கள்தான்... என்னோடு விண்வெளிக்கு வரப்போகிறார்களா?"

"ஆமாம்... பயிற்சி ஓரளவுக்கு உண்டு... பயணத்தின்போது நீங்கள் தேவையான பயிற்சிகளைக் கொடுங்கள்... எளிதில் தேறிவிடுவார்கள்... வில்பர்ட்டும் டாஃப்னியும் அதி புத்திசாலித்தனமானவர்கள்."

"பார்த்தாலே கணிக்க முடிகிறது."

"விண்வெளிக் கல மையத்திற்குப் போகலாமா?"

"வாருங்கள்."

கண்ணாடி அறைகளைக் கடந்தார்கள். எல்லா அறைகளிலேயுமே ஏதாவது ஒரு கம்ப்யூட்டர் நின்றிருந்தது.

கட்டிடத்தைக் கடந்து வந்ததும் ஒரு வெட்டவெளி விரிய - அதன் மையத்தில் ராக்கெட் ஒன்று வானத்தைப் பார்த்து குத்திட்டு நின்றது. ராக்கெட்டை செயல்படுத்துவதற்கான கம்ப்யூட்டர் டெர்மினல்கள் பல்வேறு நிறங்களில் வியாபித்திருந்தது.

மானிட்டர் திரைகளுக்கு முன்னால் - சில வழுக்கைத்தலை ஜப்பானியர்கள் உட்கார்ந்து - ராக்கெட்டின் ஆரோக்கியத்தை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

வில்பர்ட் பிரமித்தான்.

''ஸார்... அற்புதம்...!''

''இந்த அற்புதத்தை வைத்துக்கொண்டுதான் நாம் ஜெயித்துக் காட்ட வேண்டும்...''

''நிச்சயமாய் ஜெயிப்போம்...''

சஸாங் சொன்னான்.

''அமெரிக்காவின் விண்வெளி அறிவுக்கு சற்றும் சளைத்தது அல்ல ஜப்பான். அமெரிக்காவின் செவ்வாய் கிரக பயணத்தை முறியடித்து - உலக அரங்கில் அவர்களைத் தலைகுனியச் செய்ய வேண்டும்... ஜப்பானிய அரசாங்கத்தின் இந்த கோட்பாட்டை நாம் மூன்று பேரும் நிறைவேற்றப் போகிறோம்...''

வில்பர்ட் இந்த ராக்கெட்டின் பிரம்மாண்டத்தைப் பார்த்தான்.

மனசுக்குள் ஒரு பயம்...

கத்தி மாதிரி கீறியது.

''நாம் எப்போது புறப்படுகிறோம்...?''

''உங்கள் இருவர்க்கும் ஒரு வார பயிற்சி எடுத்தபின்பு.''

சஸாங் வில்பர்ட்டின் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

---

## 2

---

**ரா**க்கெட்டின் கனத்த பக்கக் கண்ணாடிகளில் - இருண்ட வானமும் - சிலுசிலுவென்று புள்ளி புள்ளியாய் நட்சத்திரக் கூட்டங்களும் தெரிந்தன. விநாடிக்கு பதினைந்து கிலோ மீட்டர் வேகத்தில் ராக்கெட் விரைந்து கொண்டிருந்தது.



ராக்கெட்டின் மையத்தில்...

பாதுகாப்பு செல்லுக்குள் இருந்தார்கள் -

ஜெனிஃபர்.

மைக்கேல்.

ஒயிட்மேன்.

மைக்கேல் சர்வீஸ் மாட்யூல் பட்டன்களை இயக்கிக் கொண்டிருக்க... ஒயிட்மேன் காமண்ட் மாட்யூலை சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெனிஃபர் ஹெட்போன் தரித்து - பூமியின் கண்ட்ரோல் அறையுடன் தொடர்பு வைத்து கட்டளைகளை வாங்கிக் கொண்டிருந்தாள்.

அந்த மூன்றடுக்கு ராக்கெட்டின் முதல் அடுக்கை சற்று முன்புதான் கழன்று கொள்ளச் செய்திருந்தார்கள். அதன் பணி முடிந்துவிட்டதற்கு அறிகுறியாய் அது எரிந்து சொக்கப்பனையாய் மாறி - பசிபிக் கடலின் கருமையில் விழுந்தது மானிட்டர் திரையில் தெரிந்தது.

பூமியின் கண்ட்ரோல் அறை கூப்பிட்டது.

''ஜெனிஃபர்...''

''ஸார்...''

''ராக்கெட்டின் முதல் அடுக்கு துல்லியமாய் செயல்பட்டு பசிபிக் கடலில் விழுவது தெரிகிறதா?''

''தெரிகிறது... வொண்டர்ஃபுல் ஜாப்''

''இப்போது ராக்கெட்டின் எடை கணிசமாய் குறைந்திருக்கும்.''

''ஆமாம். வேகம் அதிகரித்துள்ளது.''

''இப்போது என்ன வேகம்...?''

அவள் எதிரே இருந்த டிஜிடல் மீட்டர்களைப் பார்த்தாள்.

''மணிக்கு அறுபதாயிரம் கிலோமீட்டர்.''

''சரியான வேகம் அல்லவா?''

''ஆமாம்.''

''தயாராகிக்கொள்ளுங்கள். அடுத்த சில வினாடிகளில் நீங்கள் காற்று மண்டலத்தைக் கடக்கப் போகிறீர்கள்...''

''காத்திருக்கிறோம்.''

''ராக்கெட்டின் சாய்மான கோணம் எவ்வளவு?''

''ஐம்பது டிகிரி''

''போதாது! ஐம்பத்தி ஐந்து டிகிரி வையுங்கள்''

கேஸ் ஜெட்டுகளின் கோணம் மாறி ராக்கெட் 55 டிகிரிக்கு சற்றே சாய்ந்து பாய்ந்தது.

காற்று மண்டலத்தைக் கடப்பது ஒரு கண்டம்.

''ஜெனிஃபர்...''

''லைனில் இருக்கிறேன்...''

''காற்று மண்டலத்தைக் கடந்ததும் - ராக்கெட்டை கட்டுப்பாட்டுக்குள் வைத்துவிட்டு - குழாய் உணவுகளை உண்டு - ஒரு மணி நேரம் ஓய்வு எடுக்கலாம்.''

''அட்டவணையில் அடுத்த அயிட்டம் அதுதான்...''

''காற்று மண்டலத்தைக் கடக்க இன்னும் எவ்வளவு நிமிடம் இருக்கிறது?''

''இரண்டு நிமிடம் இருபத்தியோரு விநாடிகள்...''

''கண்ட்ரோல் காஜ் சரியாக உள்ளதா?''

''உள்ளது...''

''திரவ ஹைட்ரஜனின் உறைநிலையை சரி பார்த்துக் கொள்.''

''பார்த்துக் கொண்டேன்.''

''சில்தெர்ம் வினைப்பாடு...?''

''திருப்திகரம்...''

''அதிகபட்ச உஷ்ணத்தில் ராக்கெட்டின் கூர்முனைகள் பழுதுபட வாய்ப்பு இருக்கிறது...''

''சரிப்படுத்தி விடுவோம்...''



மைக்கேலும், ஒயிட்மேனும் ஜெனிஃபர்க்கு பக்கத்தில் வந்தார்கள்.

''ஜெனிஃபர்! எல்லாமே துல்லியம்...! விண்வெளிக்கலம் நூற்றுக்கு 90 சதவீதம் ஆரோக்கியமாக உள்ளது. பாக்கி பத்து சதவீதம் ராக்கெட் காற்று மண்டலத்தைக் கடந்ததும் சரியாகிவிடும்.''

மானிட்டர் திரை சிவப்பாய் ஒளிர்ந்தது.

அலர்ட் கம்ப்யூட்டர் ஒன்று திரையில் வார்த்தைகளை வரிசையாய் வைத்தது.

**''காற்று மண்டலத்தைக் கடக்கப் போகிறோம். உஷ்ணம் உள் அறை வரை தாக்கலாம். உஷ்ணம் தாக்காத ஆடைகளை அணிந்திருக்கிறீர்களா...?''**

மைக்கேல் சிரித்தான். ''பெண்டாட்டி கூட இப்படி கவனித்துக் கொள்ளமாட்டாள்...''

மைக்கேல் சொன்னதைக்கேட்டு - ஒயிட்மேனும் ஜெனிஃபரும் சிரித்துக் கொண்டிருக்கும்போதே -

''ர்ர்ர்ரொய்ய்ய்ய்ங்க்...''

காற்று மண்டலத்தைக் கடக்க ஆரம்பித்தது ராக்கெட். கனத்த கண்ணாடிக்கு வெளியே - தீப்பொறிகள் பறந்தன.

ஒரு சில நிமிஷங்கள்தான்.

காற்று மண்டலத்தைக் கடந்தது ராக்கெட். சட்டென்று தத்தம் உடம்பின் எடைகள் குறைவதை உணர்ந்தார்கள் மூன்று பேரும்.

மிதப்பது போன்ற உணர்வு.

இனி காற்று இல்லாத அண்டவெளி. அனுபவங்கள் வேறுபட்டதாக இருக்கும்.

பூமியின் கட்டுப்பாட்டு நிலையம் சில விநாடிகளுக்கு இயங்க மறுத்து பின் கரகரத்தது.

''ஜெனிஃபர்! பேசுவது கேட்கிறதா...?''

''கேட்கிறது...''

''விண்கலத்தில் எந்த பிரச்னையும்

இல்லையே?''

''இல்லை...''

''இப்போது உணவு உண்டு ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு மணி நேரம் கழித்து பூமி கட்டுப்பாட்டு நிலையம் தொடர்பு கொள்ளும்...''

ரேடியோ மௌனம் சாதித்த வினாடி -

அலர்ட் கம்ப்யூட்டர் - விநோதமாய் குரல் கொடுத்தது. தொடர்ந்து மானிட்டர் திரையில் பெரிது பெரிதாய் ஒரே வார்த்தையை திரும்பத் திரும்ப போட்டு அழித்தது.

**அபாயம்.**

**அபாயம்.**

**அபாயம்.**

## 3

மூன்று பேரும் திடுக்கிட்டார்கள்.

காற்றில் மிதந்தபடி அலர்ட் கம்ப்யூட்டரை நெருங்கினார்கள். கேள்வியை ஃபீட் செய்தார்கள்.

''என்ன ஆபத்து...?''

அது உடனே சொன்னது.

மானிட்டர் திரை பூராவும் வார்த்தைகள்.

படித்தார்கள்.

**''நமது ராக்கெட் போகும் பாதையில் விண்வெளிக் கல் ஒன்று வேகமாய் எதிர்த்திசையில் வந்து கொண்டிருக்கிறது. ராக்கெட் பாதையை உடனே மாற்றுங்கள். அடுத்த ஐந்து நிமிஷத்திற்குள் பாதையை மாற்றாவிட்டால் - அந்தப் பெரிய விண்வெளிக் கல் நம் ராக்கெட்டை நொறுக்கிவிடும்...''**

ஜெனிஃபர் கத்தினாள்.



''மைக்கேல்... அது உன்னுடைய வேலை... **'ஜைராஸ்கோப் கம்ப்யூட்ட'**ரிடம் ஆலோசனையைக் கேட்டு - ராக்கெட் போகும் பாதையை மாற்று...''

மைக்கேல் செயல்பட்டான்.

ஜைராஸ்கோப் கம்ப்யூட்டரை உசுப்பினான்.

அது உடனே மானிட்டர் திரையில் ஒப்புக்கொண்டது.

**'ஆமாம்... விண்வெளிக் கல் நம் ராக்கெட் பாதையில் வந்து கொண்டிருக்கிறது.'**

மைக்கேல் கட்டளை கொடுத்தான்.

**'ராக்கெட் பாதையை மாற்று.'**

**'மாற்றுவது சுலபம். ஆனால் சந்திரனுக்குப் போகும் பாதையிலிருந்து வெகுவாய் விலகிவிடுவோம்... பின் பழைய பாதைக்குத் திரும்புவது சிரமம்.'**

கம்ப்யூட்டர் பயமுறுத்தியது.

**'அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்... முதலில் பாதையை மாற்று. ராக்கெட் விண்வெளிக் கல்லோடு மோதினால் நொறுங்கிவிடுவோம்.'**

'ஜைராஸ்கோப் கம்ப்யூட்டர்' கட்டளைக்குக் கட்டுப்பட்டு - ராக்கெட்டின் போக்கை மாற்றியது. அலர்ட் கம்ப்யூட்டர் தன் விநோதமான கத்தலை நிறுத்திவிட்டு - உடம்பில் இருந்த பச்சை விளக்கை எரியச் செய்து - மானிட்டர் திரையில் சந்தோஷமாய் SAFE என்று எழுதிக் காட்டியது.

மைக்கேல் ஜெனிஃபரை ஏறிட்டான்.

''சந்திரனுக்குப் போகும் பாதையிலிருந்து விலகி விட்டோம். மறுபடியும் பழைய பாதைக்கு போக முடியுமா...?''

''பூமிக்கட்டுப்பாட்டு நிலையம் அந்தப் பணியைச் செய்யும்.''

ஜெனிஃபர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே -

ரேடியோ கரகரத்தது.

''கூப்பிட்டு விட்டார்கள்.''

''ஜெனிஃபர்...''

''எஸ்...''

''நம் விண்கலம் ஏன் பாதை மாறிவிட்டது...?''

''எதிரே ஒரு விண்வெளிக் கல்.''

''அலர்ட் கம்ப்யூட்டர் எழுதிக் காட்டியதா?''

''ஆமாம்...''

''அது பொய் சொல்லியிருக்கிறது.''

''என்ன... பொய்யா...?''

மூன்று பேரும் திடுக்கிட்டார்கள்.

''ஆமாம்... அலர்ட் கம்ப்யூட்டரின் மெயின் பேஸ் பிரிவில் ஒரு சிறிய குளறுபடி நடந்திருக்கிறது...''

''அலர்ட் கம்ப்யூட்டரில் குளறுபடியா...?''

''கவலைப்படாதீர்கள். சரிப்படுத்தி விடலாம்...''

''திடும்மென்று, எப்படி குளறுபடி ஏற்பட்டது?''

''அதுதான் புரியவில்லை. கம்ப்யூட்டர் என்ஜினியர்களிடம் இது குறித்து விளக்கம் கேட்கப்பட்டுள்ளது...''

''சந்திரனுக்குப் போகும் பாதை இப்போது மாறியிருக்கிறதே?''

''அதையும் அடுத்த சில விநாடிகளில் சரிப்படுத்தி விடுவோம். கலவரப்பட வேண்டியதில்லை...''

---

# 4

---

டோக்கியோ.

சஸாங், நிக்ஸன், வில்பர்ட், டாஃப்னி - டைனிங் டேபிளில் வட்டமாய் உட்கார்ந்து



டின்னர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, கார்ட்லெஸ் டெலிபோனைத் தூக்கிக் கொண்டு - அந்த ஜப்பானியர் வந்தார்.

''ஸார்... உங்களுக்கு டெலிபோன்...''

நிக்ஸன் ரிஸீவரை வாங்கிக் காதுக்குக் கொடுத்தார்.

ஓவர்சீஸ் கால் அது.

''நிக்ஸன்! நான் ஹெண்டார்ஸன். நியூயார்க்கிலிருந்து பேசுகிறேன்...''

''ஓ... ஹெண்டார்ஸன்...! உன்னுடைய போன்காலைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நம் திட்டம் என்னாயிற்று?''

''அதைச் சொல்லத்தான் இந்த போன்.''

''என்னாயிற்று சொல்...''

''நம் திட்டப்படி எதுவும் நடக்கவில்லை. நாம் பணம் கொடுத்து மடக்கிய நாஸா கம்ப்யூட்டர் என்ஜினியர் ஹென்றி ஹில்ஸ் வாங்கின பணத்துக்கு வஞ்சகமில்லாமல் - அலர்ட் கம்ப்யூட்டரில் குளறுபடி செய்து வைத்திருந்தார். அந்த கம்ப்யூட்டரும் ராக்கெட் போகும் பாதையை மாற்றச் சொல்லியிருக்கிறது. இந்தக் குளறுபடிஎ்ய நாஸா பூமிக்கட்டுப்பாட்டு நிலையம் கண்டுபிடித்துவிட்டது. இப்போது கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட என்ஜினீயர்களை நாஸா விசாரித்துக்கொண்டு இருக்கிறது.''

''ஹென்றி ஹில்ஸ் மாட்டிக் கொள்வாரா?''

''சாத்தியம் இல்லை... நூற்றுக்கணக்கான கம்ப்யூட்டர் என்ஜினீயர்கள் பணிபுரிகிற அந்த இடத்தில் - யார் அந்தத் தவறை செய்தது என்று கண்டு பிடிப்பது கடினம்...''

''உனக்கு எப்படி விஷயம் தெரிந்தது?''

''ஹென்றி ஹில்ஸ் எனக்கு போன் பண்ணியிருந்தார்.''

''சரி... நீ அங்கேயே இருந்து நிலவரத்தைக்

கவனி... நாளை இரவு 'இங்கிருந்து நம் விண்கலம் புறப்படுகிறது. சஸாங், வில்பர்ட், டாஃப்னி பயணமாகிறார்கள்.''

''அவர்களை ஆகாயத்தில்தான் வெல்ல முடியும் போலிருக்கிறது...''

''என மனதுக்கும் அப்படித்தான் படுகிறது.''

''டோக்கியோவில் எத்தனை நாள் இருப்பீர்கள்?''

''ஒரு வாரம்...''

''அவ்வப்போது தொடர்பு கொள்கிறேன்...''

ரிஸீவர்கள் வைக்கப்பட்டன.

---

# 5

---

**ச**ந்திரனை நெருங்கிக் கொண்டிருந்தது - ஜெனிஃபர், மைக்கேல், ஓய்ட்மேன் பயணம் செய்த விண்கலம்.

விண்கலத்தில் இப்போது **டிஸ்க் கலம்** என்கிற பிரதான பார்ட்டும், **லூனார் மாட்யூல்** என்கிற ஊர்தியும் மட்டுமே மிச்சமிருந்தது.

பூமியிலிருந்த கண்ட்ரோல் அறை பேசியது.

**''அடுத்த சில நிமிடங்களில் நீங்கள் சந்திரனின் ஈர்ப்புப் பாதைக்குள் நுழையப் போகிறீர்கள். சந்திரனின் ஈர்ப்புவிசை காரணமாக விண்கலத்தின் வேகம் இரண்டு மடங்காக அதிகப்படும். அட்ட வணைப்படி ராக்கெட்டின் வேகத்தை இப்போது பூஜ்யமாகக் குறைக்க வேண்டும்.''**

ஜெனிஃபர் சொன்னாள்.

''கம்ப்யூட்டர் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது.''

''இந்த விநாடியிலிருந்து சரியாய் 137வது விநாடி - விண்கலத்தின் வேகத்தைக் குறைக்க



- 'ராக்கெட் ப்ரேக்கிங்' செய்ய வேண்டும்.''

''தயாராக இருக்கிறோம்.''

''ஞாபகம் இருக்கட்டும். 137வது விநாடி...''

''தவறமாட்டோம்...''

எதிரேயிருந்த டிஜிடல் போர்டில் - விநாடிகள் விழ்ந்து கொண்டிருக்க - 137வது விநாடி வந்ததும் - **ரெட்ரோ** சிறிய ராக்கெட்டுகள் - பிரதான ராக்கெட்டுக்கு எதிராக இயங்கி - சந்திரனின் ஈர்ப்பு விசையைக் கட்டுப்படுத்தி - வேகத்தை பூஜ்யத்துக்கு கொண்டு வந்தன.

சந்திரனிலிருந்து பதினோரு கிலோ மீட்டர் உயரத்தில் - ஒரு வட்டப்பாதையைப் பற்றிக் கொண்டது அந்த **மார்ஸ்ஸேட் விண்கலம்.**

ஜெனிஃபர் கண்ட்ரோல் அறைக்கு கத்தினாள். குரலில் மகிழ்ச்சி பொங்கியது.

''திட்டமிட்டபடி சந்திரனின் வட்டப் பாதையை நெருங்கி விட்டோம்... இனி சந்திரனில் இறங்குவதற்கான நடவடிக் கைகளை ஆரம்பிக்கலாம் இல்லையா?''

''பொறு...''

காத்திருந்தாள்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பின் கண்ட்ரோல் பதட்டமாய் பேசியது ''ஒரு கவலை தரும் செய்தி உங்களுக்கு...!''

''என்ன...?''

''எதிரி நாடுகள் நம்முடைய விண்வெளிப் பயணத்துக்கு இடையூறு விளைவிக்க ஏற்கனவே சந்திரனில் இறங்கியுள்ளதாகத் தகவல். எனவே நீங்கள் உடனடியாய் சந்திரனில் இறங்கிவிடாமல் - இன்னும் சில மணி நேரம் சந்திரனின் வட்டப் பாதையிலேயே சுற்றிக்கொண்டு இருக்க வேண்டும். மேற்கொண்டு எங்கள் உத்தரவு வரும்வரை - நீங்கள் புதிதாய் எந்தப்

பணியையும் மேற்கொள்ளக்கூடாது.''

''நமக்கு முன்னால் எதிரி நாட்டவர் எப்படி சந்திரனில் இறங்கியிருக்க முடியும்...?''

''அலர்ட் கம்ப்யூட்டர் செய்த தவறினால் நாம் பாதை மாறி இரண்டு நாள் அவதிப்பட்ட நேரத்தில் - எதிரிகள் விண்கலத்தை ஏவியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் நமக்கு முன்னதாக சந்திரனில் கால் பதித்துக் காத்திருக்கிறார்கள்.''

கண்ட்ரோல் அறையிலிருந்து பேசிக் கொண்டிருக்கும் போதே -

'கர்ர்ர்' என்று ஏதோ சத்தம்.

தகவல் தொடர்பு துண்டாகிப் போனது.

''ஹலோ... ஹலோ... கண்ட்ரோல் ரூம்.''

''கர்ர்ர்''

''நான் ஜெனிஃபர் பேசுகிறேன்.''

''கர்ர்ர்''

''ஹலோ... ஹலோ...''

அந்த 'கர்ர்ர்' சத்தமும் இல்லை.

ரேடியோ ஊமையாகிப் போயிற்று.

மைக்கேலும் ஒய்ட்மேனும் பக்கத்தில் வந்தார்கள்.

''ஜெனிஃபர்... என்னாயிற்று?''

''பூமியின் கண்ட்ரோல் அறையுடன் நாம் தொடர்பை இழந்து விட்டோம். ரேடியோவில் இயக்கம் இல்லை.''

மைக்கேல் அவசர அவசரமாய் - கம்ப்யூட்டரின் கம்யூனிகேஷன் சிஸ்டத்தை ஆராய்ந்தான். முகம் வெளிறிப்போக நிமிர்ந்தான்.

''இங்கே எல்லாமே சரியாக இருக்கிறது. பூமியின் கண்ட்ரோல் அறையில்தான் ஏதோ கோளாறு...''

''இப்போது என்ன செய்யலாம்?''

''பூமியிலிருந்து எப்படியும் தொடர்பு வரும். காத்திருப்போம்.''



காத்திருந்தார்கள்.

பூமியில் இருந்த நாஸாவின் கண்ட்ரோல் அறை - மௌனமாக இருந்தது. ஒயிட்மேன் ஜெனிஃபரை ஏறிட்டான்.

''கண்ட்ரோல் அறைக்கும் - நமது விண்கலத்துக்கும் இடையே இருக்கின்ற நம் தொடர்பு அலைகள் யாராலேயோ கெடுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நிலைமையில் நாம் மௌனமாய் இருப்பது சரியில்லை. விண்வெளியில் நாம் இருக்கிற ஒவ்வொரு விநாடியும் விலை மதிப்பற்றது.''

''இப்போது நாம் என்ன செய்யவேண்டும் என்று சொல்ல வருகிறீர்கள்...?''

''அங்கே நாம் செய்ய வேண்டிய பணிகள் பூமி கட்டுப்பாட்டு நிலையத்தால் ஏற்கனவே திட்டமிட்ட ஒன்று. முன்கூட்டியே நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு அறையின் தொடர்பு கிடைக்காவிட்டாலும் ஏற்கனவே நமக்கு நிர்ணயம் செய்துள்ள காரியங்களை நடத்திக் கொண்டிருப்பதில் எந்தப் பிரச்னையும் இல்லை.''

மைக்கேல் குறுக்கிட்டான்.

''நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் சரிதான். ஆனால் எதிரி நாட்டு விண்கலம் ஒன்று சந்திரனில் இறங்கியிருப்பதாக - கண்ட்ரோல் அறை கூறியுள்ளதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அந்த எச்சரிக்கையை நாம் அலட்சியம் செய்ய முடியாது.''

ஒயிட்மேன் கேட்டான்.

''கட்டுப்பாட்டு அறையிலிருந்து தகவலே வராவிட்டால் என்ன செய்யப்போகிறோம்...? அப்படியே சந்திரனை சுற்றிக்கொண்டு இருக்க வேண்டியதுதானா...?''

''சரி... என்ன செய்யலாம்? முடிவாக

சொல்லுங்கள்!''

''அரைமணி நேரத்திற்குள் - பூமியின் கண்ட்ரோல் அறை தொடர்பு கிடைக்காவிட்டால்...''

''கிடைக்காவிட்டால்...?'' - மைக்கேல் கேட்டான்.

''நானும் ஜெனிஃபரும் சந்திரனில் இறங்க வேண்டியதுதான்.''

---

## 6

---

அந்த ஸாட்டிலைட் தகவல் நாஸாவின் கண்ட்ரோல் அறை மானிட்டரில் விழுந்ததுமே விண்வெளி ஆராய்ச்சிக்கழக மொத்த விஞ்ஞானிகளும் பரபரப்பில் வீழ்ந்தார்கள். அந்தச் செய்தியை பிரிண்டரில் வாங்கிக் கொண்ட ஒரு கம்ப்யூட்டர் எஞ்சினியர் - நாஸாவின் தலைமை டைரக்டரின் அறையை நோக்கி நடந்தார்.

தலைமை டைரக்டர் ரோஸ்வெல்ட் எதிர்பட்டார். அதற்குள் அவருக்கு விஷயம் போயிருந்தது. கம்ப்யூட்டர் எஞ்சினியரிடம் கேட்டார்.

''தகவல் உண்மைதானா?''

''உண்மைதான்... சந்திரனில் நமக்கு முன்னதாய் இறங்கியிருக்கிற விண்கலம் ஜப்பான் அரசுக்கு சொந்தமானது.''

''அவர்களுடைய விண்கலம் எப்போது புறப்பட்டிருக்கிறது?''

''நேற்று இரவு... ஏழு மணிக்கு.''

''இப்போது இரவு எட்டு மணி. 25 மணி நேரத்திற்குள் அவர்களுடைய விண்கலம் எப்படி சந்திரனுக்குப் போயிற்று?''



''அலர்ட் கம்ப்யூட்டரில் செய்யப்பட்ட ஒரு தவறு நம் விண்கலத்தின் பயண நேரத்தை விழுங்கிவிட்டது. அதுவுமில்லாமல் அவர்களுடைய விண்கலத்தின் வேகம் நம் விண்கலத்தைக் காட்டிலும் அதிகம்.''

''இது கவலைக்குரிய தகவல்தான்.''

''இனி அடுத்த கட்ட நடவடிக்கையைப் பற்றி - விவேகமாக யோசித்து செயல்பட வேண்டும் ஸார்... நம் விண்கலத்தோடு கட்டுப்பாட்டு அறைக்கு இருந்த தொடர்பு அறுபட்டுவிட்டது. அந்த அறுந்த தொடர்பை சீர்படுத்திக் கொள்ள நாம் முயல வேண்டும்...''

''வாருங்கள்... கம்யூனிகேஷன் பிரிவுக்குப் போவோம்.''

போனார்கள்.

கம்ப்யூட்டர்களுக்கு முன்னால் வியர்வை முகங்களோடு உட்கார்ந்து - மானிட்டர் திரைகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தார்கள் எஞ்ஜினியர்கள்.

தொடர்பு அறுந்துவிட்டதை கம்யூனிகேஷன் செக்ஷனில் இருந்த எல்லா கம்ப்யூட்டர்களும் உறுதிப்படுத்தின.

---

## 7

---

அரைமணி நேரம் கழிந்தும் -

கண்ட்ரோல் அறைக்கு தொடர்பு கிடைக்காமல் போகவே ஜெனிஃபரும் ஒயிட்மேனும் திட்டமிட்டபடி சந்திரனில் இறங்கத் தீர்மானித்தார்கள்.

விண்வெளி ஆடையை அணிந்து - ஆக்ஸிஜன் சிலிண்டர் கலன் உற்பத்தி செய்வதை சரிபார்த்துக் கொண்டார்கள்.

உடையின் காற்றழுத்தக் கசிவை சோதித்துக் கொண்டார்கள்.

மைக்கேல் தயக்கமாய் குரலை வெளியிட்டான்.

"இன்னும் கொஞ்சம் நிதானிக்கலாமே...?"

"இனியும் தாமதிப்பது புத்திசாலித்தனமாகப் படவில்லை... சந்திரனில் எதிரி நாட்டின் விண்கலம் எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து - அதிலிருந்து நாம் விலகிவிட்டால் பிரச்னை தீர்ந்தது..."

ஒயிட்மேன் ஸ்பிலிட் பட்டனைத்தட்ட விண்கலம் அதன் வயிற்றின் அடிப்புறத்தில் ஒரு வட்டக்கதவைத் திறந்தது. அதன் கீழே இணைக்கப்பட்டிருந்த **லூனார் கூண்டு** தெரிந்தது.

மைக்கேல் மறுபடியும் குறுக்கிட்டான்.

"ஜெனிஃபர்! திட்டத்தில் ஒரு சின்ன மாற்றம்"

"என்ன...?"

"முதலில் ஒயிட்மேன் சந்திரனில் இறங்கட்டும். அங்கிருந்து நல்ல சமிக்ஞை வந்ததும் நீங்கள் இறங்கலாம்... இரண்டு பேர்களும் ஒரே நேரத்தில் செல்வது அவ்வளவு உசிதமில்லை..."

ஜெனிஃபர் ஒயிட்மேனை ஏறிட்டாள்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"மைக்கேல் சொல்வது சரிதான். நான் முதலில் இறங்குகிறேன். பிறகு நான் தகவல் அனுப்பியதும் நீங்கள் வரலாம்."

சொன்ன ஒயிட்மேன் -

விண்கலத்தின் அடியில் இருந்த வட்ட வாயிலின் வழியாக லூனார் மாட்யூலுக்குள் பிரவேசித்தான்.

கதவு சாத்திக் கொண்டது.

மைக்கேல் பிரதான விண்கலத்திலிருந்து போய் விண்கலம் பிரிவதற்கான ஆணைத்



தொடர்களை கம்ப்யூட்டரில் செலுத்தினான். அடுத்த சில விநாடிகளில் நியூமேட்டிக் சாதனங்கள் கழன்று - அந்த சேய்க்கலம் தன்னை தனியே பிரித்துக் கொண்டது.

சந்திரனின் ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு மெல்ல ஒரு குடைராட்டினம் போல சுழன்று சுழன்று இறங்கியது.

ஒயிட்மேன் முன்பக்கக் கண்ணாடி வழியே பார்த்தான்.

சந்திரனின் நிலப்பரப்பு பழுப்பு நிறத்தில் நீட்டிய பாறை முனைகளோடு தெரிந்தது.

'எதிரிநாட்டு விண்கலம் - இந்த சந்திரனின் எந்தப் பகுதியில் இருக்கும்...?'

காதோடு பொருத்தியிருந்த ரிஸீவரில் - ஜெனிஃபரின் குரல் கேட்டது.

"ஒயிட்மேன்...!"

"ஹியரிங்..."

"சேய்க்கலம் திறமையாக செயல்படுகிறதா...?"

"வெகு திறமையாய்..."

"பூச்சிக்கால்களை நீட்டட்டுமா...?"

"செய்யுங்கள்..."

ஜெனிஃபர் தாய்க்கலத்திலிருந்து ஒரு விசையை அழுத்த - சேய்க்கலத்தின் அடிப்பாகத்திலிருந்து - ஆறு மீட்டர் நீளங்களில் உறுதியான பிளாட்டின உலோகக் கால்கள் முளைத்தன.

"வில்லியம்..."

இறங்க வேண்டிய இடத்தைக் கம்ப்யூட்டர் தேர்ந்தெடுத்துக் கொடுக்க - அதனை நோக்கி சேய்க்கலம் மெல்ல மெல்ல இறங்க ஆரம்பித்தது.

சந்திரனின் நிலப்பரப்பு பிரம்மாண்டமாய் விரிந்தது. அதன் பக்கவாட்டுக்களில் அண்டவெளி, அட்டைக் கறுப்பாய் தெரிய - தரை நட்சத்திரங்களோடு ஜொலித்தது.

ஹூனார் ஸ்லோமோஷனில் மெல்ல மெல்ல இறங்கி - சந்திரனின் நிலப்பரப்பை நெருங்கியது.

தொட்டது.

லேசான குலுங்கலோடு கால் பாய்ச்சி நின்றது.

தாய்க்கலத்திற்கு தகவல் அனுப்பினான்.

"ஹூனார்... சந்திரனின் தரையைத் தொட்டுவிட்டது."

ஜெனிஃபர் பேசினாள்.

"நல்லது. உடனே கலத்தைவிட்டு இறங்க வேண்டாம். கம்ப்யூட்டரின் ஆணைக்காகக் காத்திருங்கள்..."

ஒயிட்மேன் காத்திருந்தான்.

ஹூனார் மாட்யூலின் முக்கோண வடிவ ஃபைபர் கண்ணாடி ஜன்னல்கள் வழியாக - தான் தரையிறங்கியிருந்த இடம் முழுவதையும் பார்வையால் அளந்தான்.

விசித்திர நிசப்தம்.

மேகம் இல்லை.

காற்று இல்லை.

ஒலி இல்லை.

எந்தப்பக்கம் திரும்பினாலும் சாம்பலைக் கொட்டி வைத்த மாதிரி கடினமான பாறை மேடுகள். ஆங்காங்கே கோடு கிழித்த மாதிரி பள்ளங்கள். பார்வை போன பக்கமெல்லாம் கொழுக்கென்று ஒரு வெறுமை.

சேய்க்கலத்திற்கு கம்ப்யூட்டரின் தகவல் வந்தது.

"கலத்தை விட்டு வெளியே வரலாம்."

ஜெனிஃபர் கூப்பிட்டாள்.

"ஒயிட்மேன்...! பிராணவாயு சிலிரண்டரில் கசிவு ஏதாவது உள்ளதாவென்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்."

"பார்த்துக் கொண்டாயிற்று..."

"இனி இறங்குங்கள்..."



ஒயிட்மேன் கலத்தின் பேனல் போர்டில் கதவுக்கான அன்-லாக் ஸ்விட்சை விடுவித்தான்.

ஹூனார் ஊர்தியின் கதவு விலகியது. ஏணிப்படி நீண்டது. ஒயிட்மேன் வெளிப்பட்டு படிகளில் இறங்கினான்.

அந்த அமைதி அற்புதமாய் இருந்தது.

அணிந்திருந்த விண்வெளி உடை குளிரைத் தடுத்தது. பிராணவாயு நுரையீரல்களை ஆரோக்கியமாய் இயங்க வைத்தது.

ஏணியின் கடைசிப்படியில் இடது காலை வைத்து - வலது காலால் சந்திரனின் கடினமான நிலப்பரப்பில் தொட்டான்.

ஜெனிஃபர் ரிஸீவரில் கரகரத்தாள்.

"இறங்கியாயிற்றா...?"

"ஆயிற்று..."

"எபபடி உணர்கிறீர்கள்...?"

"அற்புதம்..."

"உங்களுக்கு இடது பக்கம் முழுமையாய் தெரிவது என்ன...?"

"ஒரு சாம்பல் குன்றின் நிழல்..."

"நீங்கள் வலது பக்கமாய் பத்தடி நடக்கலாம்."

"பத்தடி மட்டும்தானா...?"

"கம்ப்யூட்டரின் ஆணை அவ்வளவுதான்..."

ஒயிட்மேன் முதல் அடியை எடுத்து வைத்தான். காற்றில் பறப்பது போன்ற உணர்வு.

தத்தி தத்தி நடந்தான்.

ஐந்தாவது தத்தலில் -

ஒரு சாம்பல்நிறக் குன்றுக்குப் பின்னால் இருந்து நிழல் மாதிரி ஏதோ ஒன்று அவனை நோக்கி நீள்வதை உணர்ந்து - அடிவயிற்றில் திகில் வாங்கினான்.

# 8

பிரதான கலம் துல்லியமாய் - சந்திரனைச் சுற்றி நிர்ணயம் செய்த பாதையில் வலம் வந்து கொண்டிருக்க - மைக்கேலும் ஜெனிஃபரும் - கம்ப்யூட்டரின் மானிட்டர் திரை திடும்மென்று இருட்டாவதை உணர்ந்து திடுக்கிட்டார்கள்.

ஜெனிஃபர் கத்தினாள்.

''ஒயிட்மேன்...''

''.......''

''ஒயிட்மேன்...! ஹலோ... ஹியர்... மீ...''

''......''

பலத்த அமைதி.

மைக்கேல் கம்ப்யூட்டரிடம் கேட்டான்.

''என்னாயிற்று...?''

அது மௌனம் சாதித்தது.

மைக்கேல் பதட்டப்பட்டான்.

''ஜெனிஃபர்! ஒயிட்மேனுக்கு என்னாயிற்று என்று தெரியவில்லை.''

''மறுபடியும் கம்ப்யூட்டரைக் கேளுங்கள்.''

கேட்டான்.

பலத்த மௌனம்.

ஜெனிஃபரும் மைக்கேலும் கலவரப்பட்டார்கள்.

# 9

சலாங்கின் விண்கலம் சந்திர மண்டலத்தின் ஈர்ப்பு விசைக்குரிய எல்லையில் நுழைந்தது. வில்பார்ட்டும் டாஃப்னியும் விண்கலத்தின் உட்பகுதிகளில் கம்ப்யூட்டர்



களின் ஆரோக்கியத்தை சோதித்துக் கொண்டிருந்தார்கள்.

விண்கலத்தின் கண்ணாடித் தடுப்புக்கு வெளியே கறுப்புபடுதா வானமும் - அதில் பொத்தல் விழுந்தமாதிரி மின்னாத நட்சத்திரங்களும் சிதறித் தெரிந்தன.

சலாங் - வில்பார்ட், டாஃப்னியிடம் வந்தான்.

''வில்பார்ட்! சந்திரனின் சுற்றுப்பாதைக்கு வந்துவிட்டோம். இனிமேல் நம்மோடு வந்திருக்கும் உதவியாளர்கள் தாய்க்கலத்தை கையாள்வார்கள். நாம் லூனார் மாட்யூலின் உதவியுடன் சந்திரனில் இறங்கப் போகிறோம்...''

''அந்த விநாடிக்காகத்தானே நாங்கள் காத்துக் கொண்டு இருக்கிறோம்...''

''கடந்த இரண்டு நாட்களாய் உங்களுக்குக் கொடுத்த பயிற்சிகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். எதிலும் துல்லியம் வேண்டும். துல்லியம் தவறினால்... எல்லாமே நாசமாகிவிடும்...''

வில்பார்ட் சிரித்தான்.

''கவலையே படாதீர்கள். நாம் போட்டிருக்கிற திட்டப்படி எல்லாமே நடக்கும்...''

உதவியாளர்களில் ஒருவர் பக்கத்தில் வந்தார்.

''சில்தெர்ம் கண்டிஷன் சரியில்லை என்று கம்ப்யூட்டர் - வியிலிருந்து ஒரு சிறிய புகார்...''

''சரி செய்துவிடலாம். வில்பார்ட்! போய் கவனி''

வில்பார்ட் நகர்ந்தான்.

சலாங் சிரித்தான்.

''வில்பார்ட் உண்மையிலேயே திறமைசாலிதான். ஒவ்வொரு கம்ப்யூட்டரும் அவனிடம் நாய்க்குட்டி மாதிரி வாலாட்டுகிறது...!''

"அதுதான் வில்பர்ட்"

இரண்டு நிமிஷம் கழித்து - வில்பர்ட் திரும்பி வந்தான்.

"என்னாகியிருந்தது...?"

"கவலைப்படும்படி ஒன்றும் இல்லை. சந்திரனின் பாதைக்குள் நுழைந்ததினால் - அதன் 'கி' ஃபோர்ஸினால் பாதிக்கப்பட்டு - ஒரு சிறிய தடுமாற்றம்."

"சரி பண்ணிவிட்டாயா?"

"ஆயிற்று..."

"சரி... நீயும் டாஃப்னியும் காற்றமுத்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள். அடுத்த சில நிமிஷங்களில் லூனார் மாட்யூலுக்கு நாம் மாற வேண்டும்."

"சஸாங்! ஒரு சிறிய சந்தேகம்!"

"என்ன...?"

"இந்த நிமிஷம் அமெரிக்க விண்கலம் சந்திரனில் இறங்கியிருக்கும் இல்லையா...?"

"ஆமாம்..."

"அவர்களை எப்படித் தாக்கப் போகிறோம்?"

சஸாங் சிரித்தான். "அவர்களை நாம் தாக்கப் போவதில்லை... அவர்களுடைய உபகரணங்களை - மற்ற சக்தி வாய்ந்த - அறிவு பூர்வமான சாதனங்களைத் தாக்கி முடமாக்கப் போகிறோம்..."

"அவர்கள் நம்மைத் தாக்கினால்...?"

"எதிர்கொண்டு போராட வேண்டியதுதான். உடைகளை அணிந்து கொள்ளுங்கள்."

அடுத்த சில நிமிஷங்களுக்குள் வில்பர்ட்டும் டாஃப்னியும் காற்றமுத்த உடைகளுக்கு மாறினார்கள்.

கம்ப்யூட்டரின் கட்டளைக்காக - மூன்று பேரும் காத்திருந்து அது ஓ.கே. சொன்னதும் - விண்வெளிக் கலத்தின் நாசி பகுதியில் இருந்த லூனார் மாட்யூலுக்கு செல்லும்



வழியில் நுழைந்தார்கள்.

குழாய் போன்ற அமைப்பில் - வழுக்கிக் கொண்டு போய் லூனார் மாட்யூலுக்கு போய் சேர்ந்தார்கள்.

உலோகக் கதவு மெள்ள சாத்திக் கொண்டது.

சஸாங் அங்கிருந்த கண்ட்ரோல் பேனலைத் தட்டியதும் ஒரு ப்ரொப்பல்லர் வேகமாய் இயங்கி - தாய்க்கலத்தின் இணைப்பைத் துண்டித்துக் கொண்டது.

சந்திர மண்டலத்தின் மேற்குப் பகுதியில் **'ஃப்ரா மௌரா'** என்ற மலைப்பகுதியை நோக்கி - லூனார் மாட்யூல் கொஞ்சம் கொஞ்சமாய் இறங்க ஆரம்பித்தது. மெதுவாய்... மிக மெதுவாய்...

மலையின் நீண்ட பாதை ஒன்றின் மேல் கால் பரவியது அந்த லூனார் மாட்யூல்.

அந்த நிமிஷத்திலிருந்தே -

ஜெனிஃபரைப் பழிவாங்கப் போகும் சந்தர்ப்பத்துக்காக ஒருவித உத்வேகத்தோடு காத்திருக்க ஆரம்பித்தான் வில்பர்ட்.

---

## 10

---

**மை**க்கேல் ஜெனிஃபரிடம் திரும்பி கவலையுடன் குரலை வெளியிட்டான்.

"ஜெனிஃபர்... ஒயிட்மேனிடமிருந்து எந்த பதிலுமே வரவில்லையே...?"

ஜெனிஃபர் தகவல் தொடர்பு சாதனத்தின் ஆதார பட்டன்களைப் படபடவென்று தட்டிப் பார்த்தாள்.

"........"

ரிசீவர் முனை கமுக்கமாய் ஆழ்ந்த மவுனம்

சாதித்தது.

அவள் மைக்கேலை ஏறிட்டுக் கவலையுடன் சொன்னாள்.

''மைக்கேல்... என்ன ஆயிற்று என்று தெரியவில்லையே...''

''நான் அப்போதே எச்சரித்தேன்... பூமியின் கண்ட்ரோல் அறையுடன் தொடர்பிழந்த நிலையில் நாமாக எந்த முடிவும் எடுக்க வேண்டாம் என்று அப்போதே சொன்னேன்...''

''என்ன சொல்லுகிறீர்கள்...?''

''ஒயிட்மேனுக்கு என்னவோ ஆபத்து என்பது என்னுடைய கணிப்பு.''

ஜெனிஃபர் அவன் சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாமல் மெலிதாகப் புன்னகைத்தாள்.

''நீங்கள் அதிகமாகக் கற்பனை செய்கிறீர்கள். காற்றும் மனிதர்களுமற்ற பொட்டல்வெளி இந்த சந்திர மண்டலம். இங்கே நமக்கு ஏற்பட வாய்ப்புள்ள ஒரே ஆபத்து இயந்திரக் கோளாறு ஒன்றுதான். அதையும் எண்பது சதவிகிதம் நாமே சரிப்படுத்திக் கொள்ளக் கூடியதுதான்...''

''அப்படியானால் ஒயிட்மேனிடமிருந்து எந்த பதிலும் வராததற்குக் காரணம் இயந்திரக் கோளாறுதான் என்கிறீர்களா...?''

''அப்படித்தான் இருக்க வேண்டும்.''

''பூமியுடனான தொடர்பை இழந்தது...?''

''அதுவும் இயந்திரக் கோளாறுதான்.''

''சொல்லிவைத்த மாதிரி இரண்டு பக்கமும் தொடர்பு குலைந்து போனது உனக்குள் சந்தேகத்தைக் கிளப்பவில்லையா...?''

''இரண்டு பக்கமும் ஒரே மாதிரி ஃபால்ட் ஏற்பட்டதுதான் இது இயந்திரக் கோளாறு என்பதை உறுதிப்படுத்துகிறது. கம்யூனிகேஷன் சிஸ்டத்தின் ஆதார கேந்திரத்தில்



பழுது ஏற்பட்டிருக்கலாம்.''

''அதைக் கண்டுபிடித்து சரி பண்ணிக் கொள்ளலாமே...?''

''ஒருக்கால், பழுது, பூமி முனையில் இருந்தால் அவர்கள் பார்த்து சரிசெய்தால்தான் உண்டு.''

''இப்போது என்ன செய்யலாம் என்கிறாய்...?''

ஜெனிஃபர் சில விநாடி யோசனைக்குப் பின் சொன்னாள்.

''ஒயிட்மேன் ஸ்பேஸ்க்ராஃப்டை விட்டுக் கீழே இறங்கி விட்டாரா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''கம்யூனிகேஷனை சுத்தமாய் இழந்த நிலையில் அதை எப்படித் தெரிந்து கொள்வது...?''

''வழி இருக்கிறது. அந்த ஸ்பேஸ்க்ராஃப்டை மறுபடி தாய்க்கலத்துக்கு வரவழைக்க வேண்டும்.''

''வரவழைத்து...?''

''ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டு இறங்காமல் இருந்தால் ஒயிட்மேன் அதில் இருப்பார்...''

''அதில் அவர் இல்லையென்றால்...?''

''முதலில் ஸ்பேஸ்க்ராஃப்ட்டை ரிமோட் மோடில் இயக்கி இங்கே இணைய ஆணை கொடுங்கள். மற்றதை அப்புறம் யோசிப்போம்.''

மைக்கேல், கண்ட்ரோல் பேனலின் லீவரை ரிமோட் மோடுக்கு மாற்றி அமைத்தான்.

ஃபெதர் டச் ஸ்விட்சுகளில் அவன் விரல்கள் வேகமாய்ப் பதிய ஆரம்பித்தன.

மானிட்டரில் ஸ்பேஸ்க்ராஃப்ட் சின்னப் புள்ளியாய் உற்பத்தியானது.

மெல்ல -

மெல்ல -

மேலேறி தாய்க்கலத்தை நோக்கி -

நெருங்கி வர ஆரம்பித்தது.

# 11

நாஸா டைரக்டர் மையமான இருக்கையில் அமர்ந்திருக்க - அந்த நீள்வட்ட மேஜையைச் சுற்றிலும் மற்ற நாற்காலிகளை ஒரு நிபுணர் குழு அவசரமாய் ஆக்ரமித்திருந்தது.

எல்லோர் முகங்களிலும் ஸ்பஷ்டமாய் கவலை ரேகை பதிந்திருந்தது.

டைரக்டரின் பார்வை தகவல் தொடர்பு அதிகாரிகளிடம் வந்து நிலைத்து நின்றது.

அவருடைய பென்சில் கோடு உதடுகள் கவலையுடன் அசைந்தன.

''விண்வெளிக் கலத்துடன் தொடர்பை இழந்து முழுசாய் ஒரு இருபத்திநாலு மணிநேரம் நழுவியாயிற்று. இனி என்ன செய்ய உத்தேசம்...?''

அந்த அதிகாரிகள் கைகளைப் பிசைந்து கொண்டார்கள். தங்கள் வழுக்கை மண்டையின் மேற்பரப்புகளை அவஸ்தையோடு தடவிக் கொண்டார்கள். அவர்களில் ஒருத்தர் மட்டும் தயக்கத்தோடு பேச்சைத் துவக்கினார்.

''ஸார்... எதிரிகள் தொழில்நுட்ப ரீதியாக நம்மைவிட வலுவாக இருக்கிறார்கள் என்பதை முதலில் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.''

சொன்ன நபரை டைரக்டர் மிதமான எரிச்சலோடு ஏறிட்டுப் பார்த்தார்.

''நம்முடைய விண்வெளித் திட்டத்தில் ரகசியமாக ஊடுருவி மறைமுகமாக சதி செய்யும் எதிரிகள் நாஸாவை விடவும் தொழில்நுட்ப ரீதியில் வலுவானவர்கள் என்று



சொல்லவும், அதைக் கேட்கவும் வெட்கமாயில்லையா?''

''மன்னிக்கவும் ஸார். சில சமயம் உண்மை கசப்பானதாயும், வெட்கப்பட வைப்பதாகவும்தான் இருக்கின்றது.''

டைரக்டரின் கோபம் அதிகமாகி சூடாக வார்த்தைகள் பிறந்தன.

''ந்நோ மிஸ்டர்... எதிரிகள் வலுவாக உள்ளார்கள் என்றால்... நாம் அஜாக்கிரதையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்... இங்கே எதில் குறைவு வைத்திருக்கிறோம்...? பணத்தட்டுப்பாடா... இல்லை விஞ்ஞானிகளுக்குப் பஞ்சமா...?''

''ஸார்... இங்கிருந்து நாம் அனுப்பும் ஒலியலைகள் அவர்களைச் சென்று அடையும் முன்பே சிதறடிக்கப்படுகிறது.''

''அந்த சிதறடிப்பை நம்மால் முறியடிக்க முடியாதா...?''

''முடியாத காரியமில்லை. ஆனால் இப்போது நமக்கு தூரம்தான் பிரச்சனை. சிதறடிப்பு வேலை சந்திரனில்தான் நடக்கிறது என்பது எங்கள் கணிப்பு.''

''இங்கிருந்து கொண்டு இது விஷயமாய் நாம் செய்ய வேண்டியது என்ன...? அதைச் சொல்லுங்கள்.''

''எதிரி ஆட்கள் சந்திரனிலேயே முகாமிட்டு விட்டதால் இங்கிருந்துகொண்டு விஞ்ஞான பூர்வமாய் எதுவும் செய்வதற்கான சாத்தியங்கள் குறைவு. இதற்கு ஒரே தீர்வு... புலனாய்வுத்துறையின் உதவியை நாடுவதுதான்.''

''புலனாய்வுத் துறையை நாடினால்...?''

''இங்கே பூமியில் அந்த தீய சக்திகளின் கேந்திரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அதை நாம் கைப்பற்ற வேண்டும். அப்படிக்

கைப்பற்றும் பட்சத்தில் எதிரிகளின் விண்கலத்துக்கான கண்ட்ரோல் நம்முடைய கைகளுக்கு வந்துவிடும். இங்கே பூமியில் இருக்கும் எதிரிகள் முகாமைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் நாம் விஞ்ஞான பூர்வமாக அத்தனை ஒத்துழைப்பையும் புலனாய்வுத் துறைக்குக் கொடுக்கலாம்.''

அந்த அதிகாரியின் கருத்தை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்த சில நிமிடங்களில் -

புலனாய்வுத்துறைக்கு டெலிஃபோன் அழைப்பு பறந்தது.

## 12

மார்ஸ் வாயேஜர் - 20ஐ நெருங்கி வந்தது அந்த ஸ்பேஸ்க்ராஃப்ட். அந்தக் கலத்துக்கு இணையான வேகத்தில் பறக்கும்படி ரிமோட்டில் அதை இயக்கினான் மைக்கேல்.

அதன் இணைப்பு சாதனங்களை உயிர்ப்பித்து தாய்க் கலத்தோடு அதை இணையச் செய்தான்.

இரண்டுக்கும் நடுவே இருந்த வட்டத் தடுப்புக் கதவை விலகச் செய்ததும் - ஜெனிஃபர் அவசர அவசரமாய் அதற்குள் பிரவேசித்தாள்.

பேனல் போர்டை விட்டு விலகி மைக்கேலும் ஆர்வத்தோடு அந்த லூனார் மாட்யூல் ஸ்பேஸ்க்ராஃபட்டுக்குள் ஜெனிஃபரைப் பின் தொடர்ந்து சென்றான்.

''ஒயிட்மேன்...''

''ஒயிட்மேன்...''

அவர்கள் கூப்பிட்ட குரல் மவுனத்தை வாங்கிக் கொண்டு திரும்பியது.



அந்த ஸ்பேஸ்க்ராஃப்ட்டின் ஒவ்வொரு சதுர மில்லிமீட்டரிலும் அலைந்து முடித்து ஏமாற்றத்தோடு திரும்பின அவர்களின் கண்கள்.

''ஜெனிஃபர்... ஒயிட்மேன் கலத்தில் இல்லை...''

யோசனையுடன் தலையாட்டினாள் ஜெனிஃபர்.

''இனி என்ன செய்ய...?''

''நம்மில் இன்னொருவர் கீழே செல்ல வேண்டும்...''

மைக்கேல் மறுக்கும் விதமாய்த் தலையசைத்தான்.

''நீங்கள் சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...''

''என்ன சொல்கிறீர்கள் மைக்கேல்...?''

''பூமியின் தொடர்பு கிடைக்காமல் சந்திரனில் தரை இறங்க வேண்டாம் என்று நான் எச்சரித்தேன்... நீங்கள் இருவரும் பிடிவாதமாய் உடன்படவில்லை. இப்போது ஒயிட்மேனுடனும் தொடர்பை இழந்து குழப்பத்தில் இருக்கிறோம்.''

''சரி... இந்தச் சூழ்நிலையில் என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்...? பூமியின் தொடர்பை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்கிறீர்களா...?''

''அப்போதைய நிலைமையைப் பொறுத்து நான் அதைச் சொன்னேன். இப்போதுதான் சில குளறுபடிகள் நேர்ந்து விட்டதே... அதற்கேற்றாற்போல் நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.''

''ஒயிட்மேனை ஏதோ ஆபத்து சூழ்ந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன். இந்த நிலைமையில் மறுபடியும் யாரோ ஒருத்தர் அங்கே தனியாகச் செல்வதென்பது

அத்தனை உசிதமானதல்ல."

ஜெனிஃபர் நிமிர்ந்தாள்.

"அப்படியானால்...?"

"இந்தத் தாய்க்கலத்தை ஆட்டோ மோடில் செட் பண்ண வேண்டும். இது தன் பாட்டுக்கு தன் சுற்றுப் பாதையில் இயங்கிக் கொண்டிருக்க லூனார் மாட்யூலில் நாம். இருவருமே சந்திரனின் மேற்பரப்பில் இறங்க வேண்டும்."

"சரி."

"அங்கே லூனார் மாட்யூலில் நீங்கள் இருந்து கொள்ள நான் கீழிறங்கிப் போய் ஒயிட்மேனின் நிலைமையை ஆராயப் போகிறேன்."

"சரி."

"ஒருவேளை நானும் திரும்பி வராமல் போனால்... அதாவது என்னைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்காமல் போனால்... நீங்கள் எக்காரணம் கொண்டும் அங்கே தரையிறங்கக் கூடாது. இந்த விண்வெளிப் பயணம் தோல்வி என்று அர்த்தம். பூமிக்கு, இங்கே நடந்ததை... பார்த்ததை எடுத்துச் சொல்ல ஒரு நபராவது திரும்பிச் செல்ல வேண்டும். அந்த நபர் நீங்களாக இருக்க வேண்டும் ஜெனிஃபர்."

ஜெனிஃபர் கண்களில் கவலை ரொம்பிக் கொள்ள அவனைப் பார்த்தாள்.

"நீங்கள் ரொம்ப அபசகுனமாகப் பேசுகிறீர்கள்."

மைக்கேல் உதடுகளில் மெலிதான புன்னகையை அரும்ப விட்டான்.

"சந்திரனுக்கு அருகாமையில் ஒரு ஸ்பேஸ்க்ராஃப்ட்டில் உட்கார்ந்து கொண்டு உபயோகிக்கக் கூடிய வார்த்தை இல்லை 'அபசகுனம்.' அஸ் ஏ சயண்ட்டிஸ்ட்... அஸ் என் அஸ்ட்ரானமர்... நாம் நல்லது, கெட்டது அனைத்தையுமே எதிர்பார்க்க வேண்டும்...



முன்கூட்டியே திட்டமிட வேண்டும்... முன்கூட்டியே கணக்கிட வேண்டும்."

ஜெனிஃபர் தெளிவாய்த் தலையசைத்தாள்.

"எஸ் மைக்கேல்... ஐ அக்ரி வித் யு."

விண்வெளி உடைகளுக்குள் நுழைந்தார்கள்.

மைக்கேல் விண்வெளிக் கலத்தின் கண்ட்ரோல் சிஸ்டத்தைத் தானியங்கிப் பிரிவிற்கு மாற்றியமைத்தான்.

அடுத்த சில விநாடிகளில் -

மைக்கேலையும் -

ஜெனிஃபரையும் சுமந்து கொண்டு அந்த ஸ்பேஸ்க்ராஃப்ட் நிலாவின் தரைப் பகுதியை நோக்கி வேகமாய்க் கீழிறங்க ஆரம்பித்தது.

## 13

நாஸா டைரக்டரின் எதிரே உட்கார்ந்திருந்தார் அந்தப் புலனாய்வுத் துறை உயரதிகாரி; டைரக்டரின் கண் பார்வைக்கு நேரே அந்த ஃபோட்டோவைத் தூக்கிப் போட்டார்.

"நம்முடைய விண்வெளிப் பயணத் திட்டத்தில் நேர்ந்து விடும் அத்தனை இடைஞ்சல்களுக்கும் பிரதான மூளை இந்த ஆள்தான்."

அந்த ஃபோட்டோவை உற்றுப் பார்த்தார் டைரக்டர்.

புலனாய்வுத் துறை அதிகாரி தொடர்ந்து சொன்னார்.

"இன்டெலிஜென்ஸ் பிரிவைத் தீவிரமாய் முடுக்கி விட்டதில் சில வயர்லஸ் பரிமாற்றங்களைக் கண்டுபிடித்தோம். அதைத்

தொடர்ந்து கண்காணித்ததில் நிறைய திடுக்கிடும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன."

"யார் இந்த ஆசாமி...?"

"இவன் பெயர் நிக்ஸன்."

"நிக்ஸன்?"

"கொஞ்சம் பிரபலமான ஆள்தான். எழுபத்தேழு நாடுகளில் **'ப்ரைம் அட்வெர்ட்டைசிங் ஏஜன்சி'** என்ற பெயரில் கம்பெனி நடத்தி வருகிறான். பெயருக்குத்தான் அட்வெர்ட்டைசிங் கம்பெனி. அந்தப் போர்வையில் உலக அளவில் சமூக விரோத காரியங்களை முன்னின்று நடத்தி வருகிறான்."

"ஆளைப் பிடித்து விட்டீர்களா...?"

"அதில்தான் சட்டச் சிக்கல். வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறான். தவிர அந்த ஆளைக் கைது செய்யப் போதுமான ஆதாரங்கள் எங்கள் கைவசம் இல்லை. அது மட்டுமில்லை. இன்னொரு அதிர்ச்சி தரும் தகவலை அளிக்கத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன்."

"என்ன தகவல்...?"

"அந்த ஆள் மேல் நாங்கள் புள்ளி வைத்ததை அறிந்தபின் எங்களைப் பார்த்துக் கொக்கரித்திருக்கிறான்..."

"என்ன சொல்கிறான்...?"

"நாஸா விண்வெளி வீரர்களில் ஒருவரான ஒயிட்மேன் இந்த நிமிஷம் சந்திரனில் இவர்களின் கஸ்டடியில் இருக்கிறாராம். விரைவில் மற்ற இருவரையும் அவர்கள் ஆட்கள் பிடித்து வைக்கப் போகிறார்களாம். அதன் முன்னேற்பாடு தான்... தகவல் தொடர்பு துண்டிப்பாம்."

டைரக்டர் அதிர்ச்சியுடன் அந்த அதிகாரியைப் பார்த்தார்.



"நம்முடைய விண்வெளி வீரர்கள் அவர்கள் வசம் சிக்கியிருக்கிறார்களா...?"

"ஆமாம்..." தலையசைத்தார் அதிகாரி.

"எதற்காக இதெல்லாம்...?"

"நம் செவ்வாய்ப் பயண நோக்கத்தை அவர்கள் சந்தேகிக்கிறார்கள். திட்டப்படி அங்கே எந்தக் காரியமும் செய்யாமல் திரும்பி வர வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை."

"கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்து பல விஞ்ஞானிகள் இரவு பகலாய் உழைத்து இந்த விண்வெளிப் பயணம் நிகழ்ந்திருக்கிறது. அத்தனை உழைப்பையும் வீணாக்கி விட்டு அங்கிருந்து வெறுமனே திரும்பி வருவதென்பது இம்ப்பாசிபிள். ஒருக்காலும் நடக்காது."

"இது இம்ப்பாசிபிள் என்றால் நம்முடைய வீரர்கள் உயிருடன் திரும்பி வருவது வெரிவெரி இம்ப்பாசிபிள். விண்வெளி வீரர்களின் உயிரையாவது காப்பாற்ற வேண்டும் என்றால் இப்போதைக்கு அவர்கள் கோரிக்கைக்கு உடன்படுவதைத் தவிர வேறு வழியில்லை."

"இது பெரிய அளவில் விவாதித்து முடிவெடுக்க வேண்டிய விஷயம். அப்படியே ஏதாவது முடிவெடுத்தாலும் அதை விண்வெளி வீரர்களுக்குத் தெரிவிக்கும் நிலையில் இப்போது நாம் இல்லையே... விண்வெளிக் கலத்துடனான தொடர்புதான் துண்டிக்கப் பட்டிருக்கிறதே..."

"அவர்கள் கோரிக்கைக்கு நாம் ஒத்துப் போனால்... இழந்த தொடர்பை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்க அவர்கள் இசைந்திருக்கிறார்கள். இன்னொரு விஷயம் நீங்கள் கவனிக்க வேண்டும் மிஸ்டர்

டைரக்டர். அவர்கள் போக்கிலேயே சென்று அவர்களை மடக்குவது தான் புத்திசாலித்தனம். இப்போதைய நிலைமைக்கு விண்வெளிக் கலத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது நமக்கு முக்கியமான விஷயம். அவர்கள் எச்சரிக்கைக்கு நாம் உடன்படுவதாகச் சொல்லி அந்தத் தொடர்பை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்னும் அவகாசம் இருக்கிறது. நன்கு யோசனை செய்து தொடர்பை வாங்கிக் கொண்டதுமே தடாலடி நடவடிக்கையாய் ஏதாவது செய்ய நமக்கு சாத்தியங்கள் இருக்கின்றன."

டைரக்டரின் முகத்தில் சில நம்பிக்கை நட்சத்திரங்கள் வேகமாய் பிரகாசித்தன.

## 14

அந்த ஸ்பேஸ்க்ராஃப்ட்டின் கால்கள் சின்னக் குலுங்கலை ஏற்படுத்தி சந்திரனின் தரைப் பரப்பில் புதைந்து நின்றது. கண்ணாடித் தடுப்பு ஜன்னல்கள் வழியே சுற்றிலும் கண்காணித்தபடி சற்று நேரம் ஸ்பேஸ்க்ராஃப்ட்டுக்குள்ளேயே இருந்தார்கள் ஜெனிஃபரும், மைக்கேலும்.

ஜெனிஃபர் மைக்கேலிடம் தன் சந்தேகத்தை வெளியிட்டாள்.

"ஒயிட்மேன் வந்து இறங்கிய இடமும்... இப்போது நாம் இறங்கியிருக்கும் இடமும் ஒன்றுதானே மைக்கேல்...?"

மைக்கேல் உறுதியாகத் தலையசைத்தான்.

"இந்த இடம்தான். இந்த இடத்துக்கு 'ஸி ஆஃப் ட்ரான்க்குலிடி...' அதாவது அமைதிக் கடல் என்று பெயர். சந்திரனின்



மேற்பரப்பில் இருக்கற மிக நீண்ட சமவெளி இது."

அந்த நீண்ட சமவெளிக்கப்பால் வெகு தொலைவில் உயர உயரமாய் செங்குத்துப் பாறைகளோடு மலைகள் தெரிந்தன.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை எந்தவிதச் சலனமும் தென்படவில்லை. ஒயிட்மேன் அங்கிருப்பதற்கான எந்த அறிகுறியும் அவர்களுக்குத் தெரியவில்லை.

"ஜெனிஃபர்... ஒயிட்மேன் இங்கே எங்குமே தட்டுப்படவில்லையே...?"

"அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்...?"

"ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டு நான் இறங்கப் போகிறேன். என்னுடன் 'ரோவர்' கீழிறக்கப்பட வேண்டும்..."

ஜெனிஃபர் புருவங்களை உயர்த்தினாள்.

"ரோவர்...? நீண்ட தொலைவு செல்லப் போகிறீர்களா...?"

மைக்கேல் தலையசைத்தான்.

"கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒயிட்மேன் தட்டுப்படவில்லை. நீண்ட தூரம் போய்த் தேடித்தான் ஆகவேண்டும்."

அடுத்த சில நிமிஷங்களில் மைக்கேல் அந்த ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டு கீழே இறங்க ஆயத்தமானான்.

ஸ்பேஸ்க்ராஃப்டின் பிரதான திறப்பை ஹைட்ராலிக் மோட்டார்களின் உதவியுடன் திறக்கச் செய்தாள் ஜெனிஃபர்.

படிக்கட்டு ஒன்று உற்பத்தியாகி சந்திரனின் கரும் பழுப்பான தரையைத் தொட்டு நின்றது.

மைக்கேல் மெல்ல மெல்லக் கால் பரவி தரைக்கு வந்தான். புதிய டிரான்ஸ்மீட்டர் தொடர்பு ஒன்றை இருவருக்குமிடையே பொருத்திக் கொண்டார்கள்.

பேசிப் பார்த்து ட்ரான்ஸ்மீட்டரின் செயல்பாட்டை சோதித்துக் கொண்டார்கள்.

''மைக்கேல்... நான் பேசுவதைக் கேட்க முடிகிறதா...?''

''முடிகிறது. ஹைட்ராலிக் கிரேனை இயக்கி ரோவரைக் கீழிறக்கு.''

ஜெனிஃப்பர் அதற்குரிய பொத்தான்களை அழுத்தினாள்.

'விர்ர்'ரென்ற சப்தத்தோடு சில இரும்புக் கைகள் செயல்பட்டு 'ரோவர்' என்கிற காரை ஸ்பேஸ்க்ராஃப்ட்டுக்குள்ளிருந்து கீழிறக்கி வைத்தது.

நிலா பரப்பின் மேல் இயங்கும் விதமாய் பிரத்யேகமாய் வடிவமைக்கப்பட்டிருந்தது அந்த ரோவர்.

ரோவருக்குள் நுழைந்து கொண்டான் மைக்கேல்.

"எல்லாம் சரியாக இருக்கிறதா மைக்கேல்?''

ரோவரை உயிர்ப்பித்து அதன் மீட்டர் இயக்கங்களைச் சோதித்தபடியே குரலை வெளியிட்டான்.

''சரியாக உள்ளது...''

''பாதுகாப்புக்கு லேசர் பிஸ்டல் தயாராக இருக்கிறதா...?''

''இருக்கிறது.''

ரோவர் மெதுவாய் நகர ஆரம்பித்தது. ஒயிட்மேனுக்காக சங்கேத அலைகளை அந்தக் காரைச் சுற்றிலும் எல்லாத் திசைகளிலும் சிதற விட்டான் மைக்கேல்.

ஜெனிஃப்பர் சொன்னாள்.

"பேசிக் கொண்டே இருங்கள் மைக்கேல். வித்யாசமாய் எதையாவது சந்திக்க நேர்ந்தால்... ஏதாவது பிரச்னை என்றால்... ஏதாவது அபாயம் என்றால் - உடனே குரல் கொடுங்கள்...''

''ஆகட்டும்.''

மைக்கேல் பதில் சொன்ன போதே அந்த



ரோவர் கார் ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டு -

வெகு தூரம் -

வெகு தூரம் -

விலகிப் போய்க் கொண்டிருந்தது.

அந்த வினாடி -

''ஜெ... னிஃஃப்பர்...''

மைக்கேலின் குரல் ஏராளமான பதட்டத்தோடு வந்து விழுந்தது.

---

# 15

---

ஒயிட்மேனின் நீண்ட மயக்கம் கலைந்தது.

சாம்பல் நிறத்தில் இருட்டு சுற்றுப்புறத்தை தழுவியிருந்தது.

ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டு இறங்கியது... இறங்கிய சற்று நேரத்தில் திடீரென்று ஒரு உருவம் பின்னாலிருந்து தன்னை ஆக்கிரமிப்பு செய்தது... வரை ஞாபகம் இருந்தது.

லேசாய் அசைந்தவனின் உடம்பு 'விறுக்'கென்று உதறிப் போட்டது.

எலக்ட்ரிக் ஷாக்!

தான் மின்னோட்ட வட்டத்துக்குள் கட்டிப் போடப் பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டான்.

பேச்சுக் குரல் கேட்கவே - குரல் வந்த திசையில் லேசாகத் தலையை மட்டும் திருப்பிப் பார்த்தான்.

அங்கே -

வில்பர்ட், டாஃப்னி, சஸாங் - நிறையத் துணைக்கருவிகளுக்கு மத்தியில் தெரிந்தார்கள்.

காற்றில்லாத இந்த பூமியில் அவர்கள் குரல் எப்படிக் கேட்கிறது என்று யோசித்தான்.

தலை நிமிர்த்தியபோது அந்த யோசனைக்கு முற்றுப்புள்ளி பிறந்தது. அவர்கள் மலையின் குகை போன்ற அமைப்புக்குள் இருப்பது புரிந்தது. செயற்கை முறையில் ஆக்சிஜனை அந்தக் குகைக்குள் மட்டும் நிரப்பியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான்.

அவர்கள் பேச்சில் கவனத்தைப் பதித்தவன் லேசாக அதிர்ச்சி அடைந்தான்.

சலாங் குதூகலத்தோடு சொன்னார்.

''அங்கே பூமியில் நிக்ஸன் நாஸாவை பகிரங்கமாய் மிரட்டியிருக்கிறார். ஏற்கனவே தகவல் தொடர்பை இழந்து தவித்துக் கொண்டிருந்தார்கள். நாஸா விண்வெளி வீரர்கள் சந்திரனில் நம் கஸ்டடியில் இருக்கிறார்கள் என்று நிக்ஸன் அறிவித்ததும் ஆடிப் போயிருக்கிறார்கள்.''

''ஒரு ஆளைத்தானே மடக்கியிருக்கிறோம்...?''

''மற்ற இருவரும் நம் வலைக்குள் வந்து விழ எத்தனை நேரம் ஆகும்...? மானிட்டரைப் பார். அவர்கள் ஸ்பேஸ்க்ராஃப்ட் இப்போது நிலா தரையைத் தொட்டிருக்கிறது. அவர்களில் ஒருத்தன் இவனைத் தேடிக் கொண்டு ரோவர் காரில் புறப்பட்டிருக்கிறான்...''

ஒயிட்மேன் சற்றே திடுக்கிட்டு வேகமாய் யோசனைக்குள் விழுந்தான்.

அநேகமாய் தன்னைத் தேடிக் கொண்டு வருவது மைக்கேல் அல்லது ஜெனிஃபராய் இருக்கலாம்.

மனிதர்களற்ற இடம் என்ற நினைப்பில் அவர்கள் அசட்டையாய் இருந்தால் இவர்களிடம் மாட்டிக் கொள்ளுவார்களே...

அவனுக்குள் சிந்தனை பரபரத்தது. எப்படியாவது அவர்களை எச்சரிக்கை



செய்ய வேண்டும்.

எப்படி...

எப்படி...

அவன் தீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்த அந்த விநாடி -

வில்பார்ட் உடைந்து போன குரலில் - அவசரமாய் அலறினான்.

''டாஃப்னி... அங்கே... பார்...''

## 16

ஜெனிஃபர் - கண்ணாடித் தடுப்பு வழியே பார்த்தபோது மைக்கேலின் ரோவர் எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை.

ட்ரான்ஸ்மீட்டரை வேகமாய்த் தட்டி - அவனைக் கூப்பிட்டாள்.

''மைக்கேல்...''

''ஜெ... னி... ஃபர்''

''என்ன ஆயிற்று மைக்கேல்...? ஏன் உங்கள் குரல் பதட்டமாக ஒலிக்கிறது?''

''எனக்கு எதுவுமே புரியவில்லை. என்னை ஏதோ ஆபத்து சூழ்ந்திருக்கிறது.''

''ஆபத்தா? என்ன ஆபத்து...?''

''என்னைச் சுற்றி திடீரென ஒரு கும்மிருட்டு சூழ்ந்திருக்கிறது.''

''ரோவரின் தலை விளக்கைப் போட வேண்டியதுதானே...?''

''இல்லை ஜென்னி... இது சாதாரண இருட்டு இல்லை. யாரோ இயக்கி வைக்கிற இருட்டு. செயற்கை இருட்டு. ரோவரின் மூவாயிரம் வாட்ஸ் வெளிச்சமும் அந்த இருட்டுக்கு முன்னே அமுங்கிப் போய்க் கிடக்கிறது.''

''ரோவர் காரைத் திருப்பிக் கொண்டு ஸ்பேஸ் க்ராஃப்ட்டுக்கு வர முயற்சி செய்யுங்கள் மைக்கேல்.''

''கற்பனை பண்ணிப் பார் ஜென்னி! என்னைச் சுற்றிலும் கறுப்புப் பெயின்ட்டில் முக்கியெடுத்த மாதிரி அடர்த்தியான இருட்டு. எந்தத் திசையை நோக்கி இருந்தேன்... இப்போது எந்தத் திசையில் இருக்கிறேன்... ஸ்பேஸ்க்ராஃப்ட் எந்தத் திசையில் இருக்கிறது என்பதெல்லாம் எதுவுமே புரியாத நிலையில் இருக்கிறேன்.''

''ஏதோ ஒரு திசையில் ரோவரை வேகமாக ஓட்டிப் பாருங்களேன். ஒருவேளை உங்களைச் சூழ்ந்துள்ள இருட்டை விட்டு தப்பித்து நீங்கள் வெளியே வரக் கூடும்...''

''சந்திரனின் தரை நிலைக்கு அது இந்த இருட்டைக் காட்டிலும் ஆபத்தானது ஜென்னி... இங்கே திடீர் பள்ளங்கள் அதிகம். குறுக்கிடும் பாறைகள் அதிகம்.''

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்...? நான் செய்யக் கூடியது ஏதாவது உள்ளதா...?''

''எது வந்தாலும் எதிர் கொள்கிறேன். நீ எதுவும் செய்ய வேண்டாம். தாய்க் கலத்துக்குப் பாதுகாப்பாகத் திரும்பிப் போய்விடு. ஏற்கெனவே திட்டமிட்ட நேரம்வரை தாய்க்கலத்தில் சுற்றி வந்து கொண்டிரு. அதுவரை என்னிடமிருந்தோ... ஒயிட்மேனிட மிருந்தோ எந்தவிதமான தகவலும் வராத பட்சத்தில் கலத்தை பூமியை நோக்கிச் செலுத்தி விடு ஜெனிஃபர்...''

ஜெனிஃபர் அழுத்தமாய்க் கத்தினாள்.

''நோ... நெவர்... உங்கள் இருவரையும் இந்த அந்துவான வெளியில் பறிகொடுத்து விட்டு என்னால் நிர்தாட்சண்யமாகத் திரும்பிப் போக முடியாது.''



''ஜென்னி... சொன்னால் கேள். பூமியில் கண்ட்ரோல் அறை நம்மிடம் தொடர்பிழந்து... இங்கே என்ன நடக்கிறதென்றே புரியாமல் இருக்கிறது. இந்த நிலையில் அவர்களுக்கு ஒரு தகவலுமே கிடைக்காமல் போகக் கூடாது. தகவல் பரிமாற்றத்துக்காகவாவது நீ திரும்பிப் போக வேண்டும்... ஜெ... ஜெ... ன்... ஆ... ஆ... ஆ...''

அவன் பேசப் பேசவே திடீரென்று பெரும் அலறல் எழுந்தது. அந்த அலறலும் பாதியில் துண்டாகிப் போனது.

''மைக்கேல்...''

ட்ரான்ஸ்மீட்டரில் கத்தினாள் ஜெனிஃபர்.

''மை க் க் கேல்...''

அது கனத்த மவுனம் சாதித்தது.

அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள் ஜெனிஃபர்.

ரொம்ப நேரத்துக்கு அங்கே அமானுஷ்ய அமைதி நிலவிற்று.

தனியாய்த் திரும்பிப் போவதென்பது ஜெனிஃபருக்கு சகிக்கக் கூடியதாக இல்லை.

பூமியின் கால்வாசி அளவே இருக்கும் இந்த இடத்தில் அவர்கள் இருவரும் எங்கே போய்விட முடியும்?

'அவர்களைத் தேடிப் பிடிக்காமல் திரும்பிப் போவதில்லை' என்று தீர்மானித்தாள்.

அதே விநாடி -

எதேச்சையாய் கண்ணாடித் தடுப்பை நோக்கித் திரும்பின ஜெனிஃபரின் புருவங்கள் திடும்மென்று சுருங்கின.

அங்கே -

மசமச இருட்டில் -

ஸ்பேஸ்க்ராஃப்ட்டை நோக்கி ஒரு உருவம் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

# 17

புலனாய்வுத் துறை அதிகாரியின் முகப் பரப்பில் கவலை தோய்ந்து இருந்தது. நாஸா டைரக்டர் அவரை ஆர்வம் நிரம்பிய கண்களால் பார்த்துக் கேட்டார்:

''அந்த நிக்ஸனைப் பிடித்து விட்டீர்களாமே...?''

''ஆமாம், நிக்ஸனையும், முக்கியமான வேறு சில நபர்களையும் சர்வதேச போலீஸ் விங்கின் உதவியுடன் பிடித்து விட்டோம். ஆனால்...''

''ஆனால் என்ன...?''

''பிடித்து பயன் இல்லை...''

''ஏன்... ஏன்...?''

''விண்கலத்துக்கும், நமக்கும் இடையே தொடர்பைத் துண்டித்து வைத்திருந்தது அவர்கள் ஆட்கள்தான். மீண்டும் தொடர்பை ஏற்படுத்தித் தரச் சொல்லி அவர்களுக்கு 'சிவப்பு' சிகிச்சை அளித்தோம். தொடர்பைத் தரச் சொல்லி நிலாவில் இருக்கும் அவர்கள் ஆட்களுக்கு உத்தரவிட நிக்ஸன் ஆட்கள் தயாராகி விட்டார்கள்... ஆனால் கடைசி நிமிடத்தில் சிக்கலாகி விட்டது.''

''என்ன சிக்கல்...?''

''இயந்திரக் கோளாறா என்று தெரியவில்லை... அவர்களும் தகவல் தொடர்பை இழந்து நிற்கிறார்கள்.''

''அப்படிச் சொல்லி நம்மை ஏமாற்றுகிறார்களோ என்னவோ...?''

''இல்லை. நம்முடைய ஆட்களை வைத்து அந்த கண்ட்ரோல் பேனலை இயக்கிப் பார்த்து விட்டோம். அவர்கள் தகவல் தொடர்பை



இழந்திருப்பது உண்மை.''

''இனி என்ன செய்வது...?''

''இங்கிருந்து கொண்டு நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. நாஸா விண்கலத்திலிருந்தோ... அல்லது... எதிரிகளின் விண்கலத்திலிருந்தோ ஏதாவது தகவல் கிடைத்தாலொழிய நாம் எதுவும் செய்ய முடியாது.''

அடர்த்தியாய் அவர்களைக் கவலை ஊடுருவியது.

# 18

ஜெனிஃபரின் அத்தனை செல்களும் சட்டென்று உஷார் நிலைக்கு வந்தன. ஸ்பேஸ்க்ராஃப்ட்டை நோக்கி வரும் அந்த உருவத்தை உற்றுப் பார்க்க முயன்றாள்.

யார்...?

யார் அது...?

சில விநாடிகளுக்கு முன்புதான் வெகு தூரத்தில் அலறலோடு காணாமல் போன மைக்கேலாக இருக்க வாய்ப்பில்லை.

ஒய்ட்மேன்?

ஒயிட்மேனாக இருக்குமா...?

யோசனையில் பரபரத்தவளின் பார்வை அந்த உருவத்தை நிதானமாய் அளந்து பார்த்துவிட்டுத் திகைப்படைந்தது.

'ஒயிட்மேனும் இல்லை.

அப்படியென்றால் இங்கே தங்கள் மூவரையும் அல்லாமல் வேறு யாரோ இருக்கிறார்களா...? ஒயிட்மேன் காணாமல் போனதற்கும்... மைக்கேலை இருட்டு வந்து சூழ்ந்ததற்கும் அவர்கள்தான் காரணமா...?'

அவள் யோசிக்க யோசிக்கவே -

அந்த உருவம் இன்ஞ்ச் இன்ஞ்ச்சாய் ஸ்பேஸ்க்ராஃப்ட்டை சமீபித்தபடி இருந்தது.

ஜெனிஃபர் ஸ்பேஸ்க்ராஃப்ட்டைக் கிளப்பிக் கொண்டு பறந்து விட்டால் அந்த உருவத்தால் எதுவும் செய்ய முடியாது. அல்லது ஸ்பேஸ்க்ராஃப்ட்டுக்குள்ளேயே அவள் இருக்கும் வரை அதனால் அவளை நெருங்க முடியாது.

ஆனால் -

ஜெனிஃபர் ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டுக் கீழிறங்குவது என்று தீர்மானித்திருந்தாள்.

மைக்கேலும், ஒயிட்மேனும் காணாமல் போனதற்கு விடை இந்த உருவத்திடம் இருக்கக்கூடும் என்று யூகித்தாள்.

ஆகவே - அந்த உருவத்தை மடக்கி விசாரிக்க தைரியத்தை நெஞ்சில் நிரப்பிக் கொண்டு தயாரானாள்.

லேஸர் பிஸ்டலைக் கையில் தரித்துக் கொண்டாள். வெப்பன் கிட் அடங்கிய தோல் பையை தோளில் மாட்டிக் கொண்டாள்.

உருவம் ஸ்பேஸ்க்ராஃப்டின் பின்புறத்தைத் தொட்டிருக்க -

கதவை விரியச் செய்து கீழே குதித்தாள் ஜெனிஃபர்.

உருவம் சட்டென அவளை நோக்கித் திரும்பிற்று.

ஜெனிஃபர் தரையில் உறுதியாய்க் கால் பரவிக் கொண்டு லேஸர் பிஸ்டலை அந்த உருவத்தை நோக்கி உயர்த்தினாள்.

'அசையாதே' என்று சைகை காண்பித்து அதை எச்சரிக்கிறவிதமாய் சற்றே உரசிக் கொண்டு போகிறாற் போல் பிஸ்டலை இயக்கினாள்.

நீல வர்ணத்தில் லேஸர் கதிர்கள்



கொதித்துக் கொண்டு உருவத்தை உரசிச் சென்றது.

உருவம் பயத்துடன்... 'வேண்டாம்... ஒன்றும் செய்ய வேண்டாம்' என்று கையசைத்தது.

அதன் மேல் வெளிச்சத்தைப் பாய்ச்சிய ஜெனிஃபர் ஏராளமாய்த் திகைப்பில் விழுந்தாள்.

அந்த உருவம்...

வில்பர்ட்.

## 19

ஸ்பேஸ்க்ராஃப்ட்டுக்குள் அவனை உட்காரவைத்து ஆச்சரியத்தோடு விசாரித்தாள்.

''வில்பர்ட்... இது கனவா... நிஜமா...? என்னால் நம்ப முடியவில்லை. நீங்கள்... நீங்கள் எப்படி இங்கே...?''

வில்பர்ட் குற்ற உணர்ச்சி பொங்கத் தலையைக் குனிந்து கொண்டான்.

''என்னை மன்னித்துவிடு ஜெனி... உன் மேல் ஏற்பட்ட ஆத்திரத்தின் விளைவாய் ஒரு நாசகாரக் கும்பலுடன் சேர்ந்து கொண்டு உங்கள் பயணத்தை முறியடிக்கும் நோக்கத்துடன்தான் நான் சந்திர மண்டலம் வந்தேன்.''

''வில்பர்ட்?''

''ஆமாம். எங்கள் கும்பல்தான் மின்னியல் மாற்றலைகளை அனுப்பி பூமியுடனான உங்கள் தகவல் தொடர்பு அமைப்பைத் துண்டித்தது. அது மட்டுமல்ல... உங்களுடன் வந்த விண்வெளி வீரர் ஒயிட்மேனையும் எங்கள் கும்பல்தான் தாக்கிக் கைது செய்து வைத்திருந்தது.''

''அப்படியானால் செயற்கை இருட்டை

சூழச் செய்து மைக்கேலை அபகரித்தது நீங்கள்தானா...?''

வில்பார்ட் நிமிர்ந்தான்.

''உன்னோடு வந்த மைக்கேலைக் காணவில்லையா?''

''ஆமாம்.''

''அப்படியானால் நீயும் என் நிலைமையில்தான் இருக்கிறாய்.''

''வில்பார்ட்... நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.''

''ஜெனி... உங்களுக்கு இன்னல்கள் விளைவிக்கத்தான் நாங்கள் இங்கே வந்தோம். ஆனால் நம் இரண்டு குழுக்களுக்குமே பொது எதிரி ஒன்று இருப்பதை சற்று நேரத்துக்கு முன்புதான் நான் உணர்ந்தேன். அந்த எதிரியிடம் ஒயிட்மேனும், என்னுடன் வந்த மற்ற ஆட்களும் மாட்டிக் கொண்டார்கள். அதிர்ஷ்டவசமாய் நான் தப்பிவந்து விட்டேன். மானிட்டரில் உங்கள் ஸ்பேஸ்க்ராஃப்ட் இருந்த திசையை நான் கணித்து வைத்திருந்ததனால் நான் தப்பித்து இங்கே வந்து சேர்ந்து விட்டேன்.''

''என்ன சொல்கிறீர்கள்...? நம் இருவருக்கும் பொது எதிரியா?''

''ஃப்ரா மௌரா பகுதியில் ஒரு குகையில் செயற்கை முறையில் ஆக்சிஜனை நிரப்பி அங்கே கருவிகளை அமைத்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தோம். சற்று நேரத்துக்கு முன்னால் அங்கே சில விநோத உயிரினங்கள் எங்கள் மேல் தாக்குதல் தொடுத்தன...''

''விநோத உயிரினங்கள்...?''

''ஆமாம். நம்மை விட மூளையும், பலமும் வாய்ந்தவையாகத் தெரிகின்றன. அவற்றை மனித அளவில் மதிக்கலாமா... இல்லை



மிருகம் என்று சொல்வதா என்பது புரியவில்லை.''

இதைச் சொல்லும்போதே வில்பார்ட்டின் கண்களில் நிஜமான பயம் தெரிந்தது. ஜெனிஃபர் கேட்டாள்.

''அவை எப்படி இருந்தன...?''

''நம்முடைய உயரத்துக்கும் சற்று அதிகம். முகத்தில் ஆந்தை மாதிரி வட்டமாய் இரண்டு கண்கள் மட்டுமே. மற்றபடி மொழுக்கென்று வழுக்கலாய் இருக்கிறது - உடம்பும், முகமும். நிறம் - பச்சை. உடம்பில் மிக நுண்ணிய துளைகள் இருக்கக் கூடும். அவற்றில் தீக்கதிர் வீசி நம்மைத் தாக்க வருகின்றன. லேசர் பிஸ்டல் அவற்றின் முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்து விடுகின்றன. துப்பாக்கி சூட்டால் பாதிக்கப்படுவதில்லை.''

''அப்படி ஒரு ஜீவராசிகளிடமா மைக்கேலும், ஒயிட்மேனும் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்...? உடனே அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும்.''

வில்பார்ட் அவளை மறுத்தலாய்த் தலையசைத்தபடி பார்த்தான்.

''உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது ஜெனி...? நானும் நீயும் தப்பிப் பிழைத்திருப்பது தெய்வாதீனம். அவற்றோடு போராட நமக்கு உடல் பலமும் இல்லை... ஆயுத பலமும் இல்லை...''

''ஸோ...?''

''ஸ்பேஸ்க்ராஃப்ட்டைக் கிளப்பு. நாமிருவரும் பூமிக்குத் தப்பிச் செல்வதே உசிதம்.''

சொன்ன வில்பார்ட்டை ஒரு புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தாள்.

கோபத்தோடு சொன்னாள்.

''இந்தக் கீழ்த்தரமான புத்திதான்

உங்களையும் என்னையும் ஏற்கெனவே பிரித்து வைத்தது. நீங்கள் செய்திருக்கும் தேசத் துரோகங்களுக்கு வேறு ஒருத்தியாய் இருந்தால் இப்படி ஸ்பேஸ்க்ராஃப்ட்டுக்குள் உட்கார வைத்துப் பேசிக் கொண்டிருக்க மாட்டாள். மனிதாபிமான அடிப்படையில்தான் உங்களுக்கு இங்கே இடம் தந்திருக்கிறேன். கூட வந்தவர்களைத் தவிக்க விட்டு விட்டுத் தப்பிச் செல்லும் எண்ணமிருந்தால் உங்களுக்கு இந்தக் கலத்தில் இடம் இல்லை.''

''ஜெனி... உன் கோபம்தான் உனக்கு எதிரி. உன் அழிவை நீ வலியத்தேடிச் செல்கிறாய். நான் சொல்வதைப் புரிந்து கொள். அவற்றோடு போராடும் சக்தி உனக்கோ எனக்கோ இல்லை. அந்த பயங்கரங்களைக் கண்ணாரப் பார்த்தவன் நான்.''

''அவற்றோடு போராட உடல் பலமும், ஆயுத பலமும் நமக்கில்லை, என்று சொல்கிறீர்கள். என் மூளை பலத்தின் மீது எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. எனக்கு பக்கபலமாய் இருக்க தைரியம் இருந்தால் என்கூட வாருங்கள். பயமாக இருந்தால் சக மானிடன் என்ற முறையில் இந்த ஸ்பேஸ்க்ராஃப்ட்டுக்குள் உங்களுக்கு அடைக்கலம் தருவதில் எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை.''

வில்பர்ட்டின் பார்வை பேனல் போர்டை வெறித்ததைப் புரிந்து கொண்டு புன்னகைத்தாள் ஜெனிஃபர்.

''முடியாது; இந்த விண்கலத்தைக் கிளப்பிக் கொண்டு நீங்கள் மட்டும் தப்பிப் போகலாம் என்று நினைத்தால் அது முடியாது. இதன் கண்ட்ரோல் முழுவதும் லாக் செய்யப்பட்டு ரிமோட்டில் என் வசம் உள்ளது.''

தன்னிடமிருந்த அந்த ட்ரான்ஸிஸ்டர் போன்ற அமைப்பைக் காட்டிச் சிரித்தாள்.



வில்பர்ட் ஒரு விநாடி முகம் மாறி விட்டுப் பிறகு பேசினான்.

''ஜெனி... நீ என்னைத் தப்பாகப் புரிந்து கொண்டாய். அவர்கள் விதி அப்படி ஆகி விட்டது. நாம் இருவராவது பிழைத்துச் செல்ல வழி சொன்னேன். அது உன்னுடைய அகராதியில் 'துரோகம்' என்று படுகிறது. அழிவைத் தேடிச் செல்வதென்று நீ முடிவெடுத்த பின்னால் உன்னுடனே சேர்ந்து அழிவதில் எனக்குச் சம்மதம்தான்.''

இப்படி வில்பர்ட்டின் உதடுகள் சொல்லிக் கொண்டிருந்தாலும்...

அவனுடைய உள்மனசு - ஜெனிஃபர் வசம் இருக்கும் அந்த ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தை எப்படி அபகரிக்கலாம் என்று தீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்தது.

---

## 20

---

ஸ்பேஸ்க்ராஃப்ட்டை விட்டு இறங்கினார்கள் ஜெனிஃபரும், வில்பர்ட்டும். ஜெனிஃபர் வெப்பன் கிட்டை பத்திரமாய்த் தோளில் மாட்டியிருந்தாள். கிட்டின் ஒரு பகுதியில் லூனார் மாட்யுலின் ரிமோட் கண்ட்ரோலைப் பத்திரப் படுத்தி இருந்தாள்.

''வில்பர்ட்... நீங்கள் தங்கியிருந்த இடத்துக்கு நாம் போக வேண்டும்.''

''அங்கிருந்துதான் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்திருக்கிறேன்... மறுபடி அங்கேயே போக வேண்டுமா...?''

ஜெனிஃபர் முறைத்ததும் அந்த ஃப்ரா மௌரா மலைப் பகுதியை நோக்கி வழி

நடத்திச் செல்ல ஆரம்பித்தான்.

கொஞ்ச தூரம் போனதும் அவளைத் தாக்கிவிட்டு லூனார் மாட்யுலின் கண்ட்ரோலை அபகரித்து விடலாமா... என்று யோசித்தான்.

ஆனால் -

ஜெனிஃபரின் கையில் இறுக்கமாய் உட்கார்ந்திருந்த லேசர் துப்பாக்கி அவனை அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட விடாமல் தயக்கியது.

நடக்க நடக்கச் சொன்னான்.

''ஜெனி... அந்த உயிரினத்தை லேசர் துப்பாக்கி எதுவும் செய்வதில்லை. நீ சர்வ ஜாக்கிரதையோடு லேசர் துப்பாக்கியைக் கையில் பிடித்திருப்பது எனக்கு சிரிப்பை வரவழைக்கிறது.''

ஜெனிஃபர் புன்னகைத்தாள்.

''இந்த லேசர் பிஸ்டல் உங்களுக்காகவும், உங்களைப் போலவே உங்கள் ஆட்களில் யாராவது தப்பி வந்தால் அவர்களை சமாளிப்பதற்காகவும் வைத்திருக்கிறேன்.''

''என் மேல் உனக்கு நம்பிக்கை வரவில்லையா?''

''நம்பிக்கை ஏற்படும்படி என்ன செய்து விட்டீர்கள்...?''

''உன் கூட வருவதால் அந்த க்ரியேச்சர் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தெரிந்த பின்னும் கூட வரவில்லையா...?''

''எங்களுக்கு ஆபத்து விளைவிப்பதற்காக இங்கே வந்த நீங்கள், உங்களுக்கு ஒரு ஆபத்து என்றதும் என்னிடம் ஓடி வந்து தஞ்சம் புகுந்துள்ளீர்கள். உங்களைப் பற்றி அட்சர சுத்தமாய்த் தெரிந்து வைத்திருக்கும் நான் அத்தனை சுலபத்தில் உங்களை நம்பிவிடப்



போவதில்லை.''

அதற்கு மேல் வில்பர்ட் எதுவும் பேசவில்லை.

ஃப்ரா மௌரா மலைக் குகைப் பகுதிகளை அடைந்தார்கள்.

அந்த இடத்தை நெருங்கியபோது வில்பர்ட்டின் கண்களில் பயம் படர்வதை ஜெனிஃபரால் உணர முடிந்தது.

இருந்தாலும் - ஜெனிஃபரே தைரியமாய் வருகிறபோது அவளுக்கு முன்னால் தன்னுடைய கோழைத் தனத்தை வெளிக்காட்ட அவன் விரும்பாமல் இருப்பது புரிந்தது.

அவர்கள் முகாமிட்டிருந்த மலைக் குகையைக் காட்டினான் வில்பர்ட்.

உள்ளே பார்வையிட்ட ஜெனிஃபர் லேசாகத் திகைத்தாள். அந்தத் திகைப்புடன் சில சதவிகிதம் கலவரமும் ஜோடி சேர்ந்தது.

அங்கே அவர்கள் அமைத்திருந்த சக்தி வாய்ந்த மின்னணு சாதனங்கள் அத்தனையும் சின்னாபின்னமாகிக் கிடந்தன. தரையில் சிதறிக் கிடந்த வயர் துணுக்குகளும், பாறைச் சுவர்களில் ஏற்பட்டிருந்த அணுக்கதிர் துளைகளும் அங்கே ஒரு பெரும் களேபரம் நிகழ்ந்ததன் மிச்சங்களாய்க் கிடந்தன.

சுற்றுப்புறத்தை ஆராய்ந்த ஜெனிஃபரின் பார்வையில் சற்று தொலைவில் இருந்த பாறை முனைகளும் அவற்றில் கசியும் மெலிதான வெளிச்சமும் விழுந்தது.

''வில்பர்ட்...'' அவன் திரும்பினான்.

''அங்கே பார்த்தீர்களா...?''

அவள் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்துப் பார்வையைப் பதித்தான் வில்பர்ட்.

''அந்தப் பாறை மேற்பரப்பில் கசிகிற

வெளிச்சத்தை உங்களால் பார்க்க முடிகிறதா...?"

"ம்..."

"அங்கே தான் அவர்கள் இருக்க வேண்டும்."

"அ... ஆமாம்..."

ஜெனிஃபர் எட்டு வைக்க - வில்பர்ட் தயங்கிக் கொண்டே மறுபடியும் சொன்னான்.

"ஜெனி... அவர்கள் வேற்றுக் கிரகவாசிகள். அவர்கள் சக்தியும், செயல்பாடுகளும் உனக்குத் தெரியாது. நீ அங்கே செல்வதைத் தைரியம் என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். இது அசட்டு தைரியம்."

"எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். எனக்கு என் ஆட்களை மீட்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது."

சொல்லிக் கொண்டே அவள் ஒரு அடி எடுத்து வைத்தபோது -

திடுதிடுவென சில விநோத உருவங்கள் அவர்களைச் சூழ்ந்தன.

## 21

**வி**ல்பர்ட் சொன்னபோது ரொம்ப சாதாரணமாய்த்தான் தோன்றியது. அவைகளை நேருக்குநேர் பார்த்தபோது ஒரு இனம்புரியாத அதிர்ச்சி ஜெனிஃபரின் நெஞ்சுக்குள் ஊடுருவி சென்றது.

இரண்டு கண்களைத் தவிர மொழுக்கென்று இருந்தன. எண்ணெயில் ஊறப்போட்ட பச்சை மிளகாய் போல அருவறுக்க வைக்கும் பளபள உடம்பு. அவைகள் சூழ்ந்து நின்றதிலேயே ஏதோ



மின்அலை தங்களைத் தாக்குவதை அவளால் உணர முடிந்தது. வெப்பக் கதிர்கள் பரவின.

ஜெனிஃபர் லேஸர் பிஸ்டலை இயக்கியபோது - அதன் கதிர்கள் அவற்றைத் தாக்காமல் அந்த மேனியில் பட்டு வழுக்கிச் சென்று விட்டது.

வில்பர்ட் குலை நடுங்கிப் போய் அவளைப் பார்த்தான்.

"அப்போதே சொன்னேனே ஜெனி... நீ கேட்கவில்லை..."

மனசின் மையத்தில் இயல்பான கலக்கம் தோன்றினாலும் - ஜெனிஃபர் உறுதியை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

"இவைகளைப் பார்த்துப் பயந்து நடுங்குவதில் அர்த்தமில்லை வில்பர்ட். நண்பர்களுக்கு ஏற்பட்ட கதி நமக்கும் ஏற்பட்டு விட்டுப் போகிறது. என்ன ஆனாலும் சரி... போராடிப் பார்த்து விடலாம்..."

அப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - சூழ்ந்து நின்ற உருவங்களில் ஒன்று - கையில் வைத்திருந்த ஒரு டார்ச் போன்ற அமைப்பை இயக்க - ஒரு கனத்த இருட்டுப் போர்வை அவர்களை சூழ ஆரம்பித்தது.

தார் புற்றுக்குள் மூழ்கிவிட்ட மாதிரியான உணர்வு.

மைக்கேல் இந்த இருட்டைத்தான் சொல்லியிருக்க வேண்டும்.

ஜெனிஃபர் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து - தன் கையில் இருந்த வெப்பன் கிட்டிலிருந்து ஷாக்கிங் டிவைஸை விடுவித்து - அந்த உருவங்களை நோக்கி இருட்டில் குத்துமதிப்பாய் எலக்ட்ரிக் ஷாக்கை உபயோகித்தாள்.

எந்தப் பலனும் இல்லை.

உருவங்கள் விநோதமாய் சிரித்தன.

'இவர்கள் மின்சாரத்தைத் தின்பவர்கள்.'

'ப்ளாட்டினம் ஸ்வோர்ட் லேஸர் சக்தியை உபயோகப்படுத்திப் பார்க்கலாமா...?'

செயல்பட்டாள்.

ஒரு அடி நீளம் இருந்த பிளாட்டினம் டிவைஸை நீட்டி ரோஜா நிறக் கதிர்களை சுற்றிலும் பாய்ச்சினாள்.

லேஸர் பாய்ந்ததும் -

உருவங்கள் அலறியது.

''ஆ... ஆ... ஆ... ஆ... ஆ...!''

ஜெனிஃபர் திடுக்கிட்டாள்.

அது மனிதக் குரல்.

---

## 22

---

ஒயிட்மேனும் டாஃப்னியும் அந்த அறுகோண வடிவ அறைக்குள் அடைக்கப்பட்டிருந்தார்கள். அங்கே சந்திர மண்டலத்தில் என்ன நடந்து கொண்டு இருக்கிறது? ஒன்றுமே புரியவில்லை அவர்களுக்கு.

மௌனத்தை சுமந்த பச்சைநிற உருவங்கள். அடிக்கடி வருகின்றன. இடம் மாற்றுகின்றன. பக்கத்து அறையில் மைக்கேலும் சஸாங்கும் அடைபட்டிருந்தார்கள்.

அறைக்குள் பிராணவாயு நிரப்பப்பட்டு இருந்தது.

சஸாங் மைக்கேலிடம் சொன்னான்: ''உங்களை அழிப்பதற்காக நாங்கள் இங்கே வந்தோம். ஆனால் இங்கே நமக்கு முன்பே வேறு யாரோ நம் இரண்டு கோஷ்டியையும் அழிக்கக் காத்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அவர்கள் யார் என்பது தெரியவில்லை. சந்திர மண்டலத்தைத்



தற்காலிகமாக உருவாக்கியிருக்கிறார்கள்.''

''நம்மைவிட புத்திசாலிகள்!''

''அதில் சந்தேகம் இல்லை...''

''இப்போது நம்மால் என்ன செய்ய முடியும்...?''

''தப்பிக்க நினைத்தால் தப்பிக்கலாம்.''

''எப்படி...? எப்படி தப்பிக்க முடியும்...? அசைந்தால் மின்சாரம் தாக்குகிறது...''

''மின்சாரத்தை முடமாக்க வேண்டியதுதான்...''

''அதை நம்மால் செய்ய முடியாதே...?''

''முடியும்...''

''எப்படி...?''

''அங்கே மின்சார பேனல் போர்டு தெரிகிறது அல்லவா?''

''ஆமாம்...''

''நம் ஷூக்களைக் கழற்றி - பேனல் போர்டில் இருக்கும் லீவரைக் குறிபார்த்து அடித்து அதைக் கீழே இறக்கினால் போதும்...''

''குறிபார்த்து அடிக்க முடியுமா...?''

''முயற்சித்துப் பார்க்கலாம்...''

சஸாங் தன் ஷூக்களைக் கழற்றினான்.

முதலில் வலது கால் ஷூவைக் கழற்றி - பேனல் போர்டைக் குறிபார்த்து அடித்தான்.

லீவர்க்கு சற்றுத் தள்ளி விழுந்தது அடி.

பேனல் போர்டில் - லேசாய் தீப்பொறி கிளம்பி அடங்கியது.

அடுத்தது இடதுகால் ஷூ.

சஸாங் குறி பார்த்து அடித்தான்.

லீவர் இறங்கிய விநாடி - பேனல் போர்டின் சிவப்பு விளக்கு அணைந்து - பச்சை விளக்கு எரிந்தது. டாஃப்னி, ஒயிட்மேன் - பக்கத்து அறையிலிருந்து ஓடிவந்தார்கள். சஸாங் கத்தினான்.

''வாருங்கள்...! சீக்கிரம்... அந்த உருவங்கள்

வருவதற்குள் ஸ்பேஸ்க்ராஃப்ட் இருக்கும் இடத்துக்குப் போய்விடுவோம்...''

ஓட ஆரம்பித்தவர்கள் திகைத்தார்கள்.

எதிரே -

அந்த இரண்டு பச்சை உருவங்கள்.

''மைக்கேல்! அவர்கள் வந்துவிட்டார்கள்... வேகமாய் என் பின்னால் ஓடிவா...''

பச்சை உருவங்களில் ஒன்று சிரித்தது.

''அதற்கு அவசியமே இல்லை.''

அந்தக் குரல்... அந்தக் குரல்...?

ஜெனிஃபரின் குரல்.

''ஜெனிஃபர்... நீயா...?'' மைக்கேல் கத்த - தன் உடம்பில் போர்த்தியிருந்த பச்சைநிற ஆடையை உரித்தாள் ஜெனிஃபர். பக்கத்தில் இருந்த உருவமும் ஆடையைக் கழற்ற -

அது வில்பர்ட்.

வில்பர்ட் கத்தினான். ''இந்த உடையில் இருந்ததால் நாங்கள் தப்ப முடிந்தது...! பேச அவகாசமில்லை... நம் இரண்டு கோஷ்டிக்கும் எதிரான ஒரு கோஷ்டி இங்கே இருக்கிறது. அந்த கோஷ்டியில் இருந்த சில பேரை நானும் ஜெனிஃபரும் அழித்துவிட்டோம். இன்னும் சில பேர் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நாம் தப்பியாக வேண்டும். அந்த பச்சை உருவங்களில் ஒன்றை நாங்கள் பிடித்து வைத்து விசாரித்தபோது - சில அதிர்ச்சியான உண்மைகள் கிடைத்தன.''

''என்ன அது...?''

''பிறகு பேசிக் கொள்ளலாம்... முதலில் தாய்க்கலத்துக்குப் போய்ச் சேர்கிற வழியைப் பார்ப்போம்...''

ஓடினார்கள்.

தொலைவில் - லூனார் மாட்யூல்கள் தெரிந்தன.

ஆறு பேரும் கங்காருக்களைப் போல்



குதித்துத் குதித்து ஓடினார்கள்.

''ம்... சீக்கிரம்...''

''அவர்கள் வருகிற சத்தம் கேட்கிறது...''

''கடவுளே...! அவர்களிடம் மறுபடியும் மாட்டிக் கொண்டால் தொலைந்தோம்...''

''வேகமாய் ஓடுங்கள்...''

ஓட்டமாய் ஓடி லூனார் மாட்யூலுக்குள் ஒவ்வொருத்தராய் நுழைந்தார்கள்.

''சீக்கிரம்... சீக்கிரம்...''

தொலைவில் நான்கைந்து பச்சை உருவங்கள் தெரிந்தன.

''ஜென்னி! சீக்கிரம் லூனாரைக் கிளப்பு''

ஜெனிஃபர் செயல்பட்டாள்...

லூனார் மேலே எழும்பியது.

---

## 23

---

**வி**ண்கலம் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

அதில் ஜெனிஃபர், மைக்கேல், ஒயிட்மேன், சஸாங், விலபர்ட், டாஃப்னி இருந்தார்கள்.

இப்போது ஆறு பேரும் நண்பர்கள்.

ஜெனிஃபர் சொல்லிக் கொண்டிருந்தாள். ''அந்தப் பச்சை உருவங்களைப் பார்த்ததும் நானும் பயந்துதான் போனேன். ஆனால் போராடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்து துணிச்சலும் பெற்றேன். என் துணிச்சலுக்குக் காரணம் என் வெப்பன் கிட்டில் இருந்த சில பிளாட்டின ஆயுதங் கள்தான். நான் பிளாட்டினம் ஸ்போர்ட் லேசரைப் பயன்படுத்தியதும், அந்த உருவங்கள் - மனிதக் குரலில் கத்த - நான் புரிந்து கொண்டேன். அவர்கள் வேற்றுக்

கிரகவாசிகள் அல்ல. நம்மைப் போன்ற மனிதர்கள்தான். கொஞ்சம் அதி நவீன விஞ்ஞானத்தை வைத்துக் கொண்டு நம்மைப் பயமுறுத்தி விளையாடிக் கொண்டிருக்கிறவர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். அவர்கள் மனிதர்கள்தான் என்று தெரிந்து கொண்டதும் வில்பார்ட்டுக்கும் தைரியம் வந்தது. இரண்டு பேரும் சேர்ந்து பிளாட்டின லேசர்களால் தாக்க, அவர்கள் வீழ்ந்தார்கள். உயிரோடு ஒருவனைப் பிடித்து விசாரித்தோம். அப்போதுதான் எல்லா உண்மைகளும் வெளிப்பட்டது."

"என்ன உண்மைகள்?"

சஸாங் கேட்க -

ஜெனிஃபர் தொடர்ந்தாள். "அவர்கள் அரபு நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஏறக்குறைய விஞ்ஞானிகள். லேசர் துளைக்காத - ஆக்ஸிஜன் நிரம்பிய - வெப்பக் கதிர்களையும், மின்னோட்ட அலைகளையும் வெளிப்படுத்துகிற - விசேஷ பச்சை நிற ஆடைகளை அணிந்திருந்தார்கள். ஒரு குழுவாக இவர்கள் இங்கே வந்து சில மாதமாய் தங்கியிருக்கிறார்கள். அமைதிக்காக நாஸா இந்தப் பயணத்தை மேற்கொண்டது. ஆனால் சில நாடுகள் அதன் நோக்கத்தை சந்தேகித்தார்கள். ஆனால் உண்மையாய் அப்படிப்பட்ட ராணுவக் காரணங்களுக்காகவும் - நாச வேலைக்காகவும் இங்கே வந்து முகாம் போட்டிருக்கிறது அரபு நாட்டு விஞ்ஞானிகள்தான். இங்கே உள்ள அபூர்வ உலோக அணுக்களை உபயோகப்படுத்தி - விபரீதமான விஞ்ஞானக் கருவிகளையும் - ஆயுதங்களையும் தயாரித்து - சந்திர மண்டலத்தை ஒரு ஆயுதக் கிடங்காக மாற்ற இங்கே வந்திருக்கிறார்கள். இதை வைத்து



உலகத்தின் வல்லரசு நாடுகளை மிரட்டுவதே அவர்கள் நோக்கம். இப்போது அவர்கள் திட்டம் அம்பலத்திற்கு வந்துவிட்டது."

சஸாங் ஜெனிஃபரை ஏறிட்டான்.

"நாஸாவின் நல்ல நோக்கத்தை ஜப்பானிய அரசு தவறாகப் புரிந்து கொண்டு விட்டது. அதனால்தான் உங்கள் பயணத்திற்கு இடைஞ்சல் விளைவிக்க முற்பட்டோம். மன்னித்துக் கொள்ளுங்கள். இதற்கெல்லாம் காரணம் அந்த நிக்ஸன்தான்... நாஸாவைப் பற்றித் தவறான தகவல்கள் கொடுத்து எங்களைத் தப்பான வழிக்குத் திருப்பி விட்டவன் அவன்தான்."

"சென்றதை மறப்போம் சஸாங்... நம் இரண்டு நாடுகளும் பகைமையை மறந்து - விண்வெளி ஆராய்ச்சியில் ஒன்றுபட்டால் - உலக நலனுக்குக் கேடு விளைவிக்கும் உண்மையான எதிரிகளைக் கண்டுபிடித்து அழித்து விடலாம். இது முதல்படிதான். சமாதானத்துக்காகப் பாடுபடும் நமக்கு வெற்றி காத்திருக்கிறது..."

டாஃப்னி தலையசைத்தாள்.

"நிக்ஸனின் சேர்க்கை என்னையும் குற்றவாளியாக்கி விட்டது. செவ்வாய்க் கிரக பயண ஏற்பாட்டில் - என் கம்ப்யூட்டர் நிபுணத்துவத்தை நாஸாவுக்கு அளித்து என் ஒத்துழைப்பைக் காட்டுவேன்."

ஜெனிஃபர் சிரித்தாள்.

"நீயும் வில்பார்ட்டும் நிக்ஸனின் கருவிகள். உங்கள் மேல் எந்தத் தவறும் இல்லை... கோர்ட்டில் நீங்கள் அப்ருவர்களாக மாறி நிக்ஸனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தால் போதும்..."

"அதை நிச்சயமாக செய்வோம்..."

வில்பர்ட் குறுக்கிட்டான்.

''ஜெனிஃபர்! உன்னிடம் ஒரு பர்சனல் கேள்வி''

''என்ன...?''

''உனக்கும் எனக்கும் இடையே இருந்த வெறுப்பு அகன்றுவிட்டாலும் நீ மைக்கேலுடன் இப்போது சேர்ந்து வாழ்வதால் நான் இப்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்...''

''என்ன முடிவு...?''

''டாஃப்னியை நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்.''

''தாராளமாய்...! இப்போதே என் வாழ்த்துக்கள்''

எல்லோரும் சிரிக்க -

விண்கலம் ஒரு சரியான கோணத்தில் பூமியின் வாயு மண்டலத்தில் ஒருவித இரைச்சலோடு நுழைந்தது.

பூமியின் கண்ட்ரோல் அறை தொடர்பு கிடைத்தது.

''திஸ்... ஈஸ்... நாஸா... கண்ட்ரோல் ரூம்.''

''நான் ஜெனிஃபர்...''

''ஜெனிஃபர்...! கடந்த பல மணி நேரங்களாய் - விண்கலத்தோடு தொடர்பு இல்லை...! என்ன நடந்தது அங்கே...?''

ஜெனிஃபர் சொல்ல ஆரம்பிக்க -

நாஸா ஆராய்ச்சிக் கழகத்தின் அத்தனை மானிட்டர் திரைகளிலும் ஜெனிஃபர் உற்பத்தியாகி -

நடந்த சம்பவங்களைக் கோவையாய் சொல்ல ஆரம்பித்தாள்.

**(முற்றும்)**



# வாசகர் கடிதம்




**வை**ரக் கல்லுக்குச் சமமான ஐன்ஸ்டீனின் தத்துவங்களைத் தக்க சமயத்தில் கோயமுத்தூரிலிருந்து ஃபேக்ஸ் பண்ணிய ஆர்.கே.சார் அவர்களுக்கு ஆயிரம் நன்றிகள்.

**- வி.மாதவன், அருப்புக்கோட்டை.**

'எடிட்டர் ஏரியா'வின் ஆரம்பவரிகளே சிலிர்க்க வைதது. **'சூரியனுக்குக் கீழே - பூமிக்கு மேலே நம்மால் முடியாதது ஒன்றும் இல்லை'** என்ற ஜீயேவின் வரிகள் எனக்கு அசாத்திய துணிச்சலைத் தந்தது. பாராட்டுகள்.

**- எஸ்.வாமதேவன், சென்னை.**

பாம்பைப் பற்றிய என் நீண்ட நாள் சந்தேகத்திற்கு விவேக் மூலம் விளக்கம் சொன்ன ராஜேஷ்குமார் சாருக்கும், அதைப் படிக்கும் வாய்ப்பை க்ரைம் நாவல் மூலம் தந்த அசோகன்ஜி அவர்களுக்கும் ஆயிரம் நன்றிகள்.

**- பு.கவிதா, ஆரணி.**

'நாவல் மழை - 2' **'முத்திரை சதி'** - க்ரைம் மன்னன் ராஜேஷ்குமார் நாவல்களில் முத்திரை பதித்த கதைகளுள் ஒன்று. பாராட்டுகள்.

**- எஸ்.வனிதா, ஈரோடு.**

ராஜேஷ்குமாரின் **'முத்திரை சதி'** அற்புதமான க்ரைம் நாவல். விறுவிறுப்பு குறையாமல் இருந்ததால் - வேகமாய் படித்து முடித்த பின்தான் கீழே வைத்தேன். பாராட்டுகள்.

**- எஸ்.மணிவேல், கோவை.**